SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are the authorised main agents for
Sri Lankan, Jet Airways, Qatar, Kuwait, Oman & many more
We accept all major credit cards
Reservation Please call: 02086729111
COLOMBO £170+ Taxes
Head Office:
119, Tooting High street
London, SW17 OSY
bala@skywings.co.uk Mob: 07850876921



BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 09 ♦ ISSUE - 186 ♦ FRIDAY 25 JANUARY 2013



LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk



உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




## பாலை பிளந்து பயிர் விளைவிப்பான் என் ஊரான்

Photo: Jeyan


Krishna Fancy & Video
- இந்தியன் பேன்ஸி ஜீவல்லரி
- பார்ட்டி டெக்கரேசன்
- மணப்பெண் அலங்காரம்
- தென் இந்திய மலர்கள்
- டெய்லரிங், போன்கார்ட்
- பேக்ஸ் – ஜெராக்ஸ்
- விமான டிக்கெட்டு
- ஆடியோ – வீடியோ
- [தமிழ் – மலையாளம்]
- செய்தித்தாள்கள் [தமிழ்–மலையாளம்]

மல்லிகைப் பூ Special Offer 80p Only
Tel: 0208 684 9835
307, London Road, Croydon, CR0 3PA
Fax: 0208 683 0852 | Mob: 07725869630



இன்றே தொடர்புகொள்ளுங்கள்
020 8866 3311
BRITISH AIRWAYS Preferred Partner
www.flyplaces.co.uk
Flyplaces Worldwide Travel & Tours
உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில் விமானச்சீட்டுகளை உடன் பெற்றிட நம்பிக்கையான தமிழ் ஸ்தாபனம்
COLOMBO FROM £169 + TAX
CHENNAI FROM £189 + TAX
TORONTO FROM £199 + TAX
EXPRESS VISA SERVICES
இலங்கை,இந்தியா மேலும் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று வர விசா எடுத்துத்தரப்படும்.
We accept all major debit & credit cards
Note: All fares mention above are low season, excluding taxes/ terms & conditions apply.
Visit our Branches in CROYDON or HAYES



ASTA COLLEGE
ESOL Skills For Life with Citizenship
Asta CITIZENSHIP TEST
ILR and Nationality Citizenship applications
சனி மற்றும் ஞாயிறுகளிலும் Esol வகுப்புகள் உண்டு.
Esol Citizenshipக்குத் தேவையான தகுதிகள் கற்றுத் தரப்படும்.
Knowledge of Language and Life in UK
Nationality citizenship, ILR(PR)
Accredited College
Home Office Approved
ASTA : Trident Business Centre,
89 Bickersteth Road, Tooting, London, SW17 9SH
Tel : 020 8355 3453 Mob : 07958 178321



குழந்தைப் பாக்கியம் கிடைக்காதோர்
வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள்!
நீங்கள் 35 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை தானம் செய்து அதற்கீடாக '£750' ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HARLEY STREET FERTILITY CLINIC
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk



சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94



நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk



RAJA & CO SOLICITORS
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING
10 Upper Tooting Road,
Tooting Bec, London
SW17 7PG
Tel: 020 8772 4900

COLLIERS WOOD
2A Robinson Road,
Colliers Wood.
SW17 9DJ
Tel: 020 8543 4974

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family



ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## United College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்



C1, B1 & B2 Test

**Our services:**

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once,
We Train You until You Pass

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்.

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு | £ 150 .00 மட்டுமே * Including Everything | Certificate only in six days | இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

Head Office - Croydon
14 Lombard Business Park, 2 Purley Way,
Croydon CR0 3JP.
Tel: 0208 1509 953 | 0753 8933 261

West London
38A, The Broadway, Southall, UB1 21PT
Tel: 0207 998 4867
Mob: 0741 5882 072



## FM Carpets



விலையில், தரத்தில், சேவையில் என்றும் முன்னணியில்

20 % OFF

SPECIAL OFFERS FOR LANDLORD & ESTATE

இலவச மதிப்பீடு
இலவச ஃபிட்டிங்
நட்புடனான சேவை

HUGE STOCK VARIETY OF COLOURS FAST FITTING

வீட்டிற்கும் தொழில் நிலையங்களுக்கும் ஏற்றவை

MANY OFFERS IN STORE www.fmcarpets.com

020 8252 6433 / 07946 566 885

120 Aldborough Road South, Seven Kings, Ilford, IG3 8EZ



## Meera Arnold & Co

*for all your accounting needs...*

pay roll
Accountancy
Auditing
book keeping
company formation

45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333



## Part Time Staff Wanted

### Book Keeper / Credit Controller

For a company operating two care homes.



Should be experienced in Sage Line 50 and have good communication skills.

Please call Indra on 0774 2222 112 or Anton on 077 536 13001

EXCEL CARE HOMES LTD, CRAWLEY, WEST SUSSEX, RH11 0NU.



REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

## UK COOL AND SHOPFITTING Ltd.





168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY



உங்கள் வாழ்க்கைத் துணையை தேடிட இன்றே அழையுங்கள்...

தொடர்புகளுக்கு

## Arumpukal Marriage Brokers

Tel : 020 8682 1057

Mob: 07889 930 130 | Fax : 020 8682 1057

E.Mail : arumpugall@gmail.com



## ESOL with Citizenship Test £ 145

- ஆங்கில எழுத்து, வாசிப்பு அறிவு அவசியம் இல்லை
- Certificates within 6 days / சான்றிதழ்
- for British Citizenship / பிரித்தானியா பிராஜாவுரிமை
- for Permanent Residency / நிரந்தர வதிவிடவுரிமை



**Personal Licence £225***

- (மதுபானம் விற்பதற்கான) ID எடுத்துத் தரப்படும்

Tuition classes for 11+, GCSE & A' Level

தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
* Croydon * Eastham * Coventry

Tel: 020 3239 2187
0740 287 1921

# பூராயம்




## நல்வாழ்த்துக்கள்..

ஆசிரியருக்கு,

***ஒரு பேப்பர்*** ன் உழைப்பாளிகள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல், புது வருட நல்வாழ்த்துக்களையும் வாசகர்கள் சார்பாக தெரிவிக்க விரும்புகிறேன்.

*- உமா மகாலிங்கம்*

## புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டிய தமிழ் ஊடகங்கள்..

சிறிலங்கா அரசாங்கம் போராளிகளையும், மாணவர்களையும் கைது செய்து உளவியல் ரீதியான சித்திரவதை செய்வதை 'புனர்வாழ்வு' கொடுப்பதாகச் சொல்கிறது. அதனையை கிளிப்பிள்ளை மாதிரி தமிழ் ஊடகங்களும் எழுதுகின்றன அல்லது பேசுகின்றன. முதலில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு யாராவது தமிழ் படிப்பிக்க வேண்டும். கசாப்புக் கடையை யாராவது 'கருணை' நிலையம் என்று சொன்னால் இவர்களும் அப்படியே சொல்வார்களா?

*- அழகானந்தன்*

## ஐரோப்பிய பொருளாதார பிரச்சனை..

ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப்பிரச்சனைகள் பற்றி விளக்கமாக எழுதிய வேல்தர்மா அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் தொடர்ந்து இது போன்ற விடயங்களை எழுத வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்

*- சண் சண்முகராசா*

## பொல்லாத சம்பந்தர்...

சம்பந்தர்ர திருமலையான் பூராயத்தில சம்பந்தரை சுதந்திரமாய் பேசச் சொன்னார், இப்படித் தான் அது தருவார், இது தருவார் என்று சொல்லுரார். இப்படித்தான் முந்தி வடக்குக்கு மகாவலியைக் கொண்டு வருவன் என்டு தேர்தல் காலத்தில ஒரு தலைவர் சொன்னவர். காத்திருந்து, காந்திருந்து, காய்ஞ்சது தான் மிச்சம் திருமலையான் இனியும் ஏமாறதயுங்கோ. இந்த மனிசன் பொல்லாதவர்.

*- சுப்பிரமணியம்*

## கோயிகள் ஏன் ?

கோயில் ஏன் அதனால் என்ன லாபம் எங்கும் கோயில் கட்டி என்ன கண்டீர் அது உங்கள் இனத்தைக் காத்ததா என்றால் இல்லை எத்தனை துன்பங்கள் எத்தனை துயரங்கள் எத்தனை கண்ணீர். இத்தனைக்கும் பின்னும் எங்கும் அதே பாணியில் எல்லாம் நடக்கிறது. எங்கே தவறு உண்டு கண்டு பிடி. கடவுள் அன்பேமயமானவர் அவர் ஒருபோதும் தவறு இழைக்க மாட்டார். எனவே எங்களில் தான் தவறுண்டு அவரையும் எங்களைப் போல் மனிதனாக்கி அவர் பெருமையை இருட்டடிப்பு செய்வதை அவர் எப்படித் தான் பொறுப்பார் எத்தனை விதத்தில் அவர் செய்து காட்டினாலும் நாங்கள் புரிந்து கொள்ள வில்லையே.

அவர் பெயரில் எத்தனை எத்தனை திருகுதாளங்கள் செய்கிறோம் நாம் . அவர் பெயரைச் சொன்னால் பயந்த மனிதர் எல்லாம் பதறி அடி பணிவர் என்ற தைரியம்தான் எதையும் கூசாமல் சிலர் செய்யக் காரணமாம்

ஒரு பக்கம் கடவுளுக்கு உருவம் கற்பித்தல் பெருந் தவறு என்கிறார் நாமோ அவருக்கு உருவம் கற்பிப்பதோடு நிற்காமல் மனிதனுக்குரிய குணங்களை ஏற்றிக் கேவலப் படுத்துகிறோம் என்பதைச் சற்றே சிந்தித்தல் நலம். அவர் எல்லா உயிரிலும் உள்ளொளியாய் நின்று இலங்குவதையும் சகமனிதரிலும் அவரே உள்ளிருந்து எமது செய்கைகளை உற்று நோக்குகிறார் என்பதையும் சற்று சிந்தித்துச் செயற்படுவோமாக....

*- Sinniah Sivagnanasuntharam*

## பாமரனுக்கு...!

மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,

சட்டங்கள் காக்குமா சரிகாக்களை என்கிற தலைப்பில் கட்டுரை எழுதிய பகுத்தறிவாளர் பாமரனுக்கு..

*அறியாமைப் புருஷர்களையும்*
*அறிவுக் குருடர்களையும்*
*அற்புதமாக அச்சேற்றிய-உன்*
*அகம் திறந்த அறிவுக்கு-என்*
*மனம் திறந்த வாழ்த்துக்கள்*

*- வேலணையூர் சிவா*

## எதிர் என்பவன் எதிரியானான்?!

உலகத் தமிழர் பேரவையின் ஆரம்பத் தலைவர் எதிர் என அழைக்கப்படுகிற நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் என்பவர் வடமாகாண ஆளனர் சந்திரசிறிக்கு கல்வி, விளையாட்டு சம்பந்தமான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளாராம். பல்கலைக்கழக மாணவர்களை அடைத்து வைத்து சித்திரவதை செய்யிறதெல்லாம் ஐயாவின் ஆலொசனைதானோ. ஏதோ இம்மானுவல் சுவாமியாவது எங்களோடை நிக்கிறார் என்று திருப்தி படலாமோ அல்லது அவரும் மாறி விடுவாரோ என்று கவலைப்படுவதோ தெரியவில்லை.

*- கயல்விழி*

## சாத்திரி என்ன எரிக் சொல்ஹெய்மா?

தோடம்பழக் கொம்பனியின்ரை விமானத்திலை லண்டன் வந்த சாத்திரி தான் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளை நடாத்துபவர்களை சந்தித்தாக எழுதியிருக்கிறார். இந்தாள் தன்னை எரிக் சொல்ஹெய்ம் ரேஞ்சுக்கு நினைக்கிறார் போலை கிடக்குது. அது சரி ஆரப்பா இந்த அடுத்த கட்ட நகர்வுகளை நடாத்திறதாக சொல்லித் திரியிற ஆட்கள். மே 19 க்கு பிறகு, அரசியல் நடத்திறம், ஒற்றுமைப்படுத்திறம் எண்டு ஆளாளுக்கு கிளம்பியிட்டாங்கள்.

*- நவம்*

## டுப்பிளிக்கேட் பீ.ரி.எப் றோ றோ ?

பிரித்தானிய தமிழர் பேரவை (British Tamils Form) க்கு போட்டியாக BTF Tamils Form என்ற அமைப்பை கொங்கொங் குகன் என்பவர் ஆரம்பித்துள்ளதாக வெள்ளை ஆனை இணையதளத்தில் விபரமாக போட்டிருக்கிறார்கள். என்ன கொடுமையடா சாமி, இருக்கிற அமைப்புகளே ஒன்றையும் செய்யக் காணேல்லை இதுக்கிள்ளை புதுசா இன்னொண்டா, ஒரே பெயரிலையா? இந்தியாவின் ஆராட்சி, ஆய்வுச் செட்டையே, நீ பொத்திக் கொண்டு இருக்கமாட்டாயா?

*- கனக்ஸ்*

## ரொபர்ட் இவான்சின் முன்மாதிரி?

முள்ளிவாய்க்கால் படுகொலை முடிஞ்சதும் முடியாததுமாய் சிறிலங்கா தூதரக வாசலை தட்டியவர்களில் முன்னாள் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ரொபர்ட் இவான்ஸ் ம் ஒருவர். இனி சிறிலங்கா அரசாங்கத்தோடை சேர்ந்துதான் வேலை செய்ய வேண்டும் என 2009 நொவெம்பர் ஹரோ கவுன்சில் கட்டிடத்திலை நடந்த கூட்டத்திலை அவர் சொன்னதும் பதிவிலை இருக்கு. இப்ப தமிழீழ கோரிக்கையை ஏற்ற நாடு கடந்த அரசாங்கத்திலை சேர்ந்திருக்கிறார். பாவம் டாக்குத்தர் இந்தாளை நம்பி அம்சாவின்ரை காலிலை விழுந்திட்டார்.

*- நிர்மலா சந்திரன்*

*கருத்துக்களுக்கு* : **Tel : 020 7043 4314**

## BRITISH TAMILS FORUM

## பிரித்தானிய தமிழர் பேரவையின் அறிவித்தல்

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னான காலகட்டத்தில் தமிழ் மக்களின் போராட்டத்தைச் சிதைப்பதற்கு பல வடிவங்களில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டது

போராட்டத்தின் தொடர்ச்சியைக் கருவறுக்க தோல்வி மனப்பான்மையை வளர்த்தெடுத்தல், தனி மனித பலவீனங்களைக் கையாண்டு போராட்ட சக்திகளிடையே சிதைவுகளை உருவாக்கல், மக்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்களைக் கூறி அவர்களை போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தல், பலமான போராட்ட சக்தியாக எந்த அமைப்பையும் உருவெடுக்காமல் சிதைத்தல் என்பன போன்றவை பயன்படுத்தபட்டு வருகின்றது.

அமைப்புகளை தொடர்ச்சியாக சிதைப்பததற்கும் பலவீனபடுத்தவும் மேற்கொள்ளபட்ட பல முயற்சிகளில் இருந்து தன்னைப் பாதுகாத்து தன் கவனத்தையும் மக்களின் அர்ப்பணிப்பையும் போராட்டத்தின்பால் குவிக்க முடியாத அமைப்புக்கள் சிதைந்து பலவீனமாகி காணாமல் போய் விடுவது வரலாறு.

தமிழ் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி மற்றும் நீதி ஆகியவற்றுக்கான போராட்டத்தை பலவீனப்படுத்துவதற்கும் பின்னடையச் செய்வதற்கும் பிரித்தானிய தமிழர் பேரவையின் சின்னம் மற்றும் அதன் பெயரை ஒத்த பெயர்கள் ஆகியவற்றை பயன்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து விழிப்பாக இருக்குமாறு இச் சந்தர்ப்பத்தில் பிரித்தானிய தமிழர் பேரவை பொது மக்களை வேண்டிக்கொள்கிறது.

பிரித்தானிய தமிழர் பேரவையை பலவீனப்படுத்துவதன் மூலம் போருக்குப் பின்னரான தமிழ் மக்களின் அரசியல் மற்றும் ,ராஜதந்திர போராட்டத்தில் பின்னடைவை ஏற்படுத்தும் பொருட்டு பல்வேறு சக்திகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன

பிரித்தானிய தமிழர் பேரவையை பொறுத்த வரையில் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 2009 முதல் ஒரு மக்கள் அமைப்பாக வெளிப்படைத் தன்மையுடன் பங்குபற்றல் ஜனநாயக அடிப்படையில் பல்வேறு அரசியல், இராஜதந்திர மற்றும் சமூக பொருளாதார நடவடிக்கைகளை தமிழ் மக்களின் விடுதலைக்காக முன்னெடுத்து வருகிறது.

எத்தகைய சவால்களும் இடர்களும் வரினும், எதற்கும் அஞ்சாமல் தொடர்ந்தும் தமிழ் மக்களின் தாயகம் நோக்கிய விடுதலைக்கான போராட்டத்தில் நாம் தொடர்ந்தும் பற்றுறுதியுடன் செயற்படுவோம்.

பலமான அமைப்பினால்தான் மக்களை ஒன்றுபடுத்தி வெற்றிகரமாக போராட்டத்தை முன் நகர்த்த முடியும். பிரித்தானிய தமிழர் பேரவை மக்களின் சொத்து. அதனைப் பாதுகாத்து பலப்படுத்த வேண்டிய பொறுப்பு மக்களிடமே உள்ளது.

*- பிரித்தானிய தமிழர் பேரவை*




TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400



Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

➡ESOL with Citizenship
▪ British Passport/ Naturalisation
▪ Indefinite Leave to Remain

➡International ESOL Diploma (A1,A2,B1,B2,C1,C2)
▪ Student Visa / Extension Test
▪ Spouse Visa / Extension Test
▪ Work Permit / Extension Test

▪ Courses from £200
▪ Successfully trained over 35,000 students
▪ Certificates within 20 days
▪ Multilingual staff
▪ City & Guilds approved centre

National Centres

| | | |
|---|---|---|
| BIRMINGHAM<br>7 Washington Street<br>Birmingham<br>B1 1JR<br>01216339919 | SHEFFIELD<br>Sorby House<br>42 Spital Hill, Sheffield<br>S4 7LG<br>01143034303 | LEICESTER<br>Imperial House<br>St Nicholas Circle, Leicester<br>LE1 4LF<br>01163260248 |
| LUTON<br>169 A, Dunstable Road<br>Luton.<br>Beds – LU1 1BW<br>01582723123 | SLOUGH<br>18-24 Stoke Road<br>Slough, Berkshire<br>SL2 5AG<br>01753722056 | NEWCASTLE<br>51-52 Victoria Avenue<br>Whitley Bay,Tyne & Wear<br>Newcastle Upon Tyne – NE26 2BA<br>01912525265 |

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, JANUARY 25, 2013, ISSUE 186

## பொதுநலவாய நாடுகளின் மாநாடு: சிறிலங்காவை அம்பலப்படுத்தக் கிடைத்துள்ள சந்தர்ப்பம்

பிரித்தானியாவின் காலனித்துவத்திலிருந்த நாடுகளின் கூட்டமைப்பில், உலகில் ஆங்கிலம் பேசுகிற மக்களில் பெரும்பகுதியினர் வாழ்கின்ற, சர்வதேச அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட ஐம்பத்திநான்கு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. காத்திரமான முடிவுகளை எடுப்பதற்கு அல்லது அவற்றை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் இக்கட்டமைப்பிடம் காணப்படாவிட்டாலும், அதன் மாநாடுகளும், அங்கு தெரிவிக்கப்படும் கருத்துகளும் சர்வதேச அளவில் கவனத்தை பெற்றுவருகின்றன. ஆகையால், இலங்கைத்தீவில் இம்மாநாட்டை நடாத்துவதற்கு கிடைத்த வாய்ப்பையிட்டு சிறிலங்கா அரசாங்கம் மகிழ்ச்சி கொள்வதில் ஆச்சரியத்துக்கு இடமில்லை.

சிறிலங்கா அரசாங்கம் தமக்கு கிட்டிய இவ்வாய்ப்பை, தாம் மேற்கொள்ளும் தமிழினப் படுகொலையை மறைத்து, உலக அரங்கில் தம்மீது படிந்திருக்கும் கறையை அகற்றுவதற்கும், இராசதந்திர ரீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பயன்படுத்த விளைகிறது. சிறிலங்காவின் வெளிநாட்டு பரப்புரை நிறுவனங்களும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் என எதிர்பார்க்கலாம்.

இம்மாநாட்டை இலங்கைத் தீவில் நடாத்துவதில் இக்கூட்டமைப்பில் உள்ள பெரும்பாலான நாடுகளுக்கு ஆட்சேபனை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் சனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், சில முன்னணி நாடுகள் இம்மாநாட்டில் கலந்து கொள்வதனைத் தவிர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரித்தானியாவைப் பொறுத்தவரை, இவ்விடயத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட வெளியுறவு அமைச்சு (Foreign and Commonwealth Office) உறுதியான முடிவினை எடுப்பதனைத் தவிர்த்து வருகிறது. ஆனால், இக்கூட்டில் அங்கம் வகிக்காத அமெரிக்காவின் இராஜங்கத்திணைக்களம் சிறிலங்காவில் இம்மாநாடு நடைபெறுவதனை விரும்பவில்லை என அறியமுடிகிறது. கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் கார்ப்பர் அவர்கள் வெளிப்படையாகவே தனது அதிருப்தியை வெளியிடுவதிலிருந்து அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது.

குறித்த நாடுகள் இன்னமும் தீர்க்கமான முடிவினை எட்டாத நிலையில், இலங்கைத் தீவில் இம்மாநாட்டை நடாத்துவதற்கான எதிர்ப்பை பதிவு செய்து கொள்வதற்கான நடவடிக்கைகளில் புலம்பெயர் தமிழர்கள் இறங்க வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக கனடாவிலும், பிரித்தானியாவிலும் மேற் கொள்ளப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகள் இந்நாடுகளின் முடிவில் செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்கலாம்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*இஞ்சை வெளிநாடுகளிலை இருக்கிற அமைப்புகளும் நாட்டிலை இருக்கிற கட்சியளும் சேர்ந்து பிரகடனம் ஒன்றை செய்யப்போயினம் என்று கதை அடிபடுகுது. நல்ல விசயம், ஆனால் இதைப்பற்றி திரு, திருமதி, செல்வி, செல்வன் பொதுசனம் ஆகிய நீங்கள் என்ன நினைக்கிறியள் எண்டு அவையளுக்கு தெரியப்படுத்த வேண்டாமோ? இதுக்கெண்டு இடம் ஒதுக்கி உங்கடை கருத்துகளை நாங்கள் பிரசுரிக்கிறது எண்டு முடிவெடுத்திருக்கிறம். நீங்கள் உங்கடை கருத்துகளை சுருக்கமாக எழுதி அனுப்புங்கோ இல்லாட்டி குரலை பதிவு செய்யுங்கோ.*

*ஆங்கிலத்திலை வாற சில விசயங்களை தமிழிலையும், தமிழிலை வாற சில விசயங்களை ஆங்கிலத்திலையும் மொழிபெயர்த்துப் போடுங்கோ எண்டு சில ஆட்கள் கேட்கினம். செய்யலாம், நேரம்தான் பிரச்சனையாய் இருக்கு. இந்த விசயத்திலை நீங்களும் உதவி செய்தியள் எண்டால் இந்த திட்டத்தை ஒப்பேற்றலாம். இல்லாட்டி இது கஸ்ரம் பாருங்கோ.*

***ஒரு பேப்பர்** இல் எழுத்துப்பிழை வாறது ஒண்டும் புதிய விசயமில்லை. ஆனால் அது இன்னும் கூடிப்போடும் போலை இருக்குது. ஏற்கனவே எழுத்துப்பிழை பார்த்து சரிசெய்து தந்து உதவியவர்கள் இளைப்பாறியுள்ளதாலை தான் இந்த நிலை. இது விசயத்திலையும் உங்களின்ரை உதவியை எதிர்பார்க்கிறோம். நீங்கள் மனம் வைச்சியள் எண்டால் செய்யலாம்.*

*ஒரு பேப்பரிலை பிரசுரிக்கப்படுகிற விளம்பரங்கள் விசயத்திலை ஆசிரியர் குழு தலையிடுறதில்லை அதுபோலை ஆசிரியர் குழு விசயத்திலை விளம்பரப்பிரிவு தலையிடுறதில்லை. விளம்பரம் போட்டவை எண்டதுக்குகாக அவையளை புழுகித் தள்ளுறதும் இல்லை, போட மறுத்திட்டினம் எண்டதுக்காக திட்டித் தீர்க்கிறதும் இல்லை. இதுதான் **ஒரு பேப்பர்** தொடங்கின காலத்திலை இருந்து இருக்கிற நடைமுறை. அதை இண்டைக்கு வரைக்கும் கடைப்பிடிக்கிறம்.*

*முந்தியும் சொன்ன இந்த விசயத்தை திரும்பவும் ஏன் சொல்லிறம் எண்டால், ஏதோ ஒரு பியர் விளம்பரத்தை பாத்திட்டு, எப்படா இப்பிடி ஒண்டு வரும் எண்டு பாத்துக் கொண்டு இருந்த மாதிரி சிலர் எகிறிக் குதிக்கிறார்கள். இவையளுக்கு ஒண்டைத்தான் சொல்லலாம் விளம்பரங்களை படிக்கிறது நல்லதுதான். அதைத்தான் விளம்பரம் போடுகிற ஆட்களும் விரும்புவினம். அதோடை நில்லாமல் உள்ளடகத்தையும் படியுங்கோ. அதுக்கு பிறகு உங்கடை கருத்துகளை எங்களுக்கே நேரே சொல்லுங்கோ. அதுக்குதான் எங்கடை எல்லா சமூகவலைத்தளங்களின் விபரங்களும் தந்திருக்கிறம்.*

*அடுத்த பேப்பர் பெப்ரவரி 8ம் திகதி வரும்.*

*வேறை என்ன?*

*அடுத்த பேப்பரிலை சந்திப்பம்...*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# Asylum policies are extensions of Sri Lanka's repression



During a recent high profile visit to Colombo, Australian Foreign Minister Bob Carr announced that his country would be pumping millions of dollars into Sri Lanka, as part of a concerted effort to stem the ever rising flow of asylum seekers, comprising almost entirely of Tamils, from the island. Measures included providing surveillance training and equipment for the Sri Lankan Navy and intelligence services. By reducing the 'problem' to one of insufficient surveillance and security, these measures ignore the pervasive and deepening conditions of repression that compel increasingly desperate to flee. Furthermore by funding and supporting the Sri Lankan Navy, accused of shelling hospitals and civilians, Australia has chosen a policy described by one of its former diplomats as 'siding with genocide'. Not only is Australia fundamentally disregarding its international obligations on human rights, but is an active partner in Sri Lanka's repression. And it is not the only western state.

In widely reported comments during his visit, Minister Carr blithely dismissed asylum seekers fleeing the island as 'economic migrants.' This claim, enthusiastically grasped and repeated by the Sri Lankan state, cruelly belittles the utter desperation of the refugees and the perilous journeys they are willing to undertake. Packed into dangerously dilapidated boats on journeys lasting thousands of miles, and paying extortionate sums, asylum seekers risk arrest and torture by the Sri Lankan Navy to reach foreign shores, where they then face indefinite detention in camps described as 'unbearable' by the UN human rights chief.

Strengthening the Sri Lankan state's 'capacity' without addressing the institutionalised racism at its core will not resolve the issue of asylum boats. Far from being 'weak' or 'lacking' capacity the Sri Lankan state has robust and well developed institutional structures, backed and funded by generous donor assistance. It is precisely because of this that Sri Lanka has been able to successfully prosecute genocidal repression for several decades, through both overt violence and more subtle administrative and economic means of demographic change and exclusion. Strengthening the Sri Lankan state will not therefore stem the flow of asylum seekers but merely deepen the conditions of repression that drives them. For example, Australia's promised funding for rural projects and schools will simply enable Sri Lankan's project of erecting a permanent militarized Sinhala domination of Tamil speaking areas. Inevitably, more Tamils will seek to flee. It is no accident that the recent 'rise' in asylum boats takes place amid the collapse of the last hopes of a 'post-conflict' improvement in security and freedom.

Moreover, Australia's asylum policy is in marked contrast with its position at the UN Human Rights Council. Whilst diplomats in Geneva continue to deplore the state of human rights in Sri Lanka, bureaucrats in Canberra deport refugees back to the very oppression their colleagues are condemning. Australia is not of course alone in this hypocrisy. Canada, while vocal in its condemnation of the lack of accountability and reconciliation in post war Sri Lanka, nevertheless continues to deny asylum seekers refuge and treats Tamil 'boat people' with hostility and suspicion. Britain is similarly implacably deporting Tamil asylum seekers to Sri Lanka. In well documented cases many of these people, tortured and sexually abused on arrival in Sri Lanka, have again managed to escape and have since been granted asylum in the UK. Despite this clear evidence, deportations continue and returnees are sent back to an uncertain fate with nothing to rely on but a piece of paper with the British High Commission's number.

Whilst refusing to accept the accounts of asylum seekers, these countries have nevertheless joined international efforts to pressure Sri Lanka over its abysmal and deteriorating rights record. Western democracies, including Britain, Australia and Canada have also been insistent on the need for Sri Lanka to engage in an internationally recognised process to investigate and account for the grave war crimes committed during final stages of the war. The stark contradiction between these two positions – criticising Sri Lanka's abuses whilst deporting abuse victims and potential war crimes witnesses – dilutes and undermines the credibility of international calls for accountability and reconciliation.

In well documented cases many of these people, tortured and sexually abused on arrival in Sri Lanka, have again managed to escape and have since been granted asylum in the UK.

As long as western states continue to deny refuge to the victims of Sri Lanka's abuses, the regime in Colombo has little need to take heed of international pressure. In short, unless western states start to take seriously their own international obligations towards human rights refugees fleeing Sri Lanka's persecution, their efforts to elicit accountability, reconciliation and sustainable peace there are guaranteed to fail. The hypocrisy inherent in the contradiction between asylum policies and commitments to human rights must end. At present, western asylum regimes serve as direct extensions of Sri Lanka's repression of the Tamils.

*Courtesy : Tamil Guardian*

# “உலகத்தமிழர் பேரவை எம்முடன் கலந்தாலோசித்து முடிவுகளை எடுப்பதில்லை”

**பிரித்தானிய தமிழர் பேரவையின் இணைப்பாளர் இரவி குமார்**

உலகத்தமிழர் பேரைவை (GTF) என்ற புலம்பெயர் அமைப்புகளின் கூட்டமைப்பில் பிரித்தானிய தமிழர் பேரவை அங்கம் வகிக்கின்றபோதிலும், தமது அமைப்புடன் கலந்தாலோசித்து முடிவுகள் எட்டப்படுவதில்லை என பிரித்தானிய தமிழர் பேரவையின் இணைப்பாளர் இரவி குமார் ஒரு பேப்பருக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார். புலம்பெயர் நாடுகளால் நடைபெற்று வரும் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக செயற்பாட்டாளர்களை தொடர்புகொண்டு தகவல்களை வெளியிடும் நோக்கில் இச்செவ்வியினை ஒரு பேப்பர் மேற்கொண்டது. கடந்த *ஒரு பேப்பர்* ல் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரனின் செவ்வி பிரசுரமானது எமது வாசகர்கள் அறிந்ததே.

புலம்பெயர் நாடுகளில் செயற்படும் மக்கள் அமைப்புகளை இணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்குவதில் பிரித்தானிய தமிழர் பேரவையின் பங்கு முக்கியமானது எனக் குறிப்பிட்ட இரவி குமார், பதினான்கு நாடுகளில் இயங்கும் தமிழ் அமைப்புகளை இணைத்து 2009 மார்ச் மாதத்தில் இலண்டனில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாடு இதற்கு முன்னோடியாக அமைந்தது என்றார். இவ்வாறு உருவாக்கப்பட்ட உலகத்தமிழர் பேரவை மேலிருந்து கீழாக அதிகாரங் கொண்ட அமைப்பாக இல்லாமல் உறுப்புரிமை கொண்ட அனைத்து அமைப்புகளுக்கும் சமமான அதிகாரங்கள் கொண்டதாகவே இருக்க வேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும், தாயகத்தில் செயற்படும் அரசியல் கட்சிகள் மற்றும் குடிசார் சமூகம் ஆகியவற்றை இணைத்து ‘பொதுப் பிரகடனம்’ ஒன்று விரைவில் வெளியிடப்படவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் அது பற்றிய விபரங்களை இரவி குமாரிடம் கேட்டபோது, தான் இது பற்றி அறிந்திருக்கவில்லை எனத் தெரிவித்தார். கடந்த *ஒரு பேப்பர்* ல் வெளியாகியிருந்த உலகத்தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரனின் செவ்வியில் தமது ‘நான்கு தூண்கள்’ (Four pillers) திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ் அமைப்புகளை இணைத்து ‘பொதுப் பிரகடனம்’ ஒன்றை வெளியிடவிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

பேர்லினை தளமாகக் கொண்டு இயங்கும் பேர்கோப் பவுன்டேசன் (Berghof Foundation) என்ற மேற்கத்தைய அரசுகளின் நிதியுதவியில் இயங்கும் அரசுசாரா அமைப்பு, குறித்த ‘பொதுப்பிரகடனத்தை’ விரைவாகச் வெளியிடுமாறு வற்புறுத்தி வருவதாகத் *ஒரு பேப்பர்* க்கு கிடைக்கும் செய்திகளிலிருந்து தெரியவருகிறது. கடந்த பல வருடங்களாகவே இவ்வமைப்பு சில தமிழ் அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கி வருவதுடன் பயிற்சிப்பட்டறைகளையும் ஏற்பாடு செய்துவருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய தமிழர் பேரவையின் பிரதிநிதியாகவே சுரேன் சுரேந்திரன் உலகத்தமிழர் பேரவையின் பேச்சாளராக உள்ளார் என்பதனை எமக்கு வழங்கிய செவ்வியில் மறுத்திருக்கும் இரவி குமார், தமது பிரதிநிதிகளாக ராஜ் வாகீசன், நட்மயில்வாகனம் ஆகிய இருவரையும் நியமித்திருப்பதாகவும், ஆனால் அவர்களை ஏற்றுக் கொள்ள உலகத் தமிழர் பேரவை மறுத்து வருவதாகவும் குறிப்பிட்டார். ஏற்கனவே, ஜேர்மனியில் உள்ள எந்தவொரு தமிழ் அமைப்பும் உலகத்தமிழர் பேரவையில் அங்கம் வகிக்காத நிலையில், ஜேர்மனியில் வசிக்கும் இமானுவல் அடிகளார் எவ்வாறு உலகத்தமிழர் பேரவையின் தலைவராக இருக்கிறார் என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. சர்வதேச முரண்பாட்டுக்குழு போன்ற அமைப்புகளாலும், வெளிநாட்டு அமைச்சகங்களாலும் புலம்பெயர் தமிழ் மக்களின் அமைப்பு எனற அங்கீகாரத்தை பெற்றுள்ள உலகத்தமிழர் பேரவை உட்கட்சி ஜனநாயகத்தை பேண மறுப்பது அக்கட்டமைப்பினை நடவடிக்கைகளையிட்டு ஐயத்தை தோற்றுவிக்கிறது.

ஆட்சிமாற்றம்

இலங்கைத் தீவில் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தினால், தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ளும் முயற்சிகளுக்கு அது சாதகமாக அமையுமா என் கேள்விக்கு பதிலளித்த இரவிகுமார், எந்த ஆட்சி பதிவியிலிருக்கிறது என்பதற்கு அப்பால் அங்கு ஒரு இனப்படுகொலை நடைபெறுகிறது என்றே நாம் உறுதியாக நம்புகிறோம். இந்த வரலாறு 1948ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வருகிறது. இனவழிப்பினை தொடர்வதில் அரச கட்டமைப்புகளும், அரசு சாராத கட்டமைப்புகளும் வாகனமாக பயன்படுத்தப்படுகிறது. உண்மையான சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் நிலை நாட்டுவதற்கு இந்தக் கட்டமைப்புக்கள் மீளமைப்பு செய்யப் படவேண்டியுள்ள நிலையில், வெறும் ஆட்சி மாற்றம் எவ்வாறு தீவில் அமைதியையும், செழிப்பையும் ஏற்படுத்தப்போகிறது என்பதே எமது கேள்வியாக உள்ளது. இப்போதுள்ள அராஜகமான அரசாங்கத்தை அகற்றுவதற்கு முயல்பவர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றே உறுதியாக நம்புகிறோம். இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க முனைபவர்கள், இனப்பிரச்சனைக்கு தாம் சரியான தீர்வினை வைத்திருக்கிறார்கள் எனபதனை ஒடுக்கப்பட்டுள்ள எமது மக்களை ஏற்றுக் கொள்ள வைக்கவேண்டும். அத்தீர்வினை அவர்களை பிரிதிநிதித்துவப்படுத்தும் மக்கள் முன்வைத்து அவர்களையும் ஏற்றுக் கொள்ளவைக்க வேண்டும். அதன் பின்னரே சேர்ந்தியங்குவது தொடர்பில் எம்மை அணுக முடியும்.

ஆங்கிலத்திலான இரவி குமார் அவர்களது செவ்வி முழுமையாக 13பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதன் தமிழாக்கத்தை எமது இணைய தளத்தில் வெகுவிரைவில் இணைக்க உள்ளோம்.

*ஒரு பேப்பர்* உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

**BBK Partnership**
Croydon.................. 020 8150 9950

**Meera Arnold & Co**
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

*ஒரு பேப்பர்* தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

# The LTTE Locked up in a Peace Bottle! Did you know?

**By: Nadarajah Balasubramaniam (PFLT-UK)**

**People's Front of Liberation Tigers**

To-day is Friday, 18th January, 2013 and the time now is 12.00. I am at the new and beautiful Beijing Capital Airport as transit passenger on my journey to Sydney, Australia. I have to wait for five hours to get the flight to Sydney.

Now I am at a kiosk for a serving of Mocha coffee. I have only Sterling pounds in my pocket. When I pulled out my ten pound note, they said, “No way, we don't know or want British Pound, we accept other currencies”. I paid by my NatWest Visa debit card. Instantly I realized the righteousness of my vision that Britain will not have a healthy or beneficial economic relationship with People's great China. I dare to call Great China because Tamils will soon or later be convinced of that truth.

The book, “STILL COUNTING THE DEAD” by Frances Harrison is in my hand. I have already read it and marked some use full information with my notes. I just opened page 13; the heading is “The War the United Nation Lost”. “I was so disgusted. The whole system failed. It wasn't only the UN, but the whole international community. Tens of thousands of civilians were slaughtered by the Sri Lankan government and the world just moved on. It just passed on by”. UN aid worker. I am wondering how one can introduce the UN to school children. Has the UK or India or even the US got an answer?

I turned over to page 28. “..Britain had been quite happily selling weapons to the Sri Lankan military throughout the ceasefire and the build –up to the war. It's not widely known, but from 2001 to 2008 the UK issued more arm- export licenses to Sri Lanka than any other nation in Europe.” Frances Harrison further says, “The failure of the United Nations to protect Tamil civilians was symptomatic of the indifference of the world as a whole.”

I put this book in my bag and pulled out our ‘Oru Paper’, Issue 185 where I finished my column with a lightning truth. The senior journalist MR Narayanasamy came out with the truth in his latest book,“It was assessed in the late 1990s that since the Sri Lankan state did not appear to be in a position to militarily overcome the LTTE, the Tigers could be locked up in a peace bottle.” He further says, “This is the work of RAW. No doubt that RAW is part and parcel of the Indian government”.

Naturally I started looking for Sam Rajappa's valuable writings He is consulting Editor of The Weekend Leader and now Director of The Statesman Print Journalism School, Kolkata.

“Astudy by the Norwegian government about its failed peace mission in SriLanka are leased in November last reveal show a clutch of Malls (a pet name for Malayalys) who had wormed their way to key positions in the Indian government, conspired to sabotage the peace effort sand gave new confidence to the SriLankan armed forces to take on the LTTE, hit her to considered invincible.”

He says that, “India walked a fine line between showing concern for the plight of theTamils stuckin the war zone while supporting the defeat of the LTTE and preserving its ties with the Sri Lanka.

The search has now begun for the 'Indianhand' in the murder of Tamils

Lt.-Gen.Satish Nambiar, another Mallu, wasdeputedasmilitaryadvisertoRajapaksa,andhisbrotherVijayNambiarwaspostedtotheUNtoactasanadvisertotheUNSecretary-General.

Kutty Ayyappan Nair was posted as the principal secretary to the Prime Minister, forming the anti-Tamil Malluaxis. Anthropologically, the Sinhalese share commontraits with the people of Kerala who share a congenital hatred for the Tamil race.

MKNarayanan,whowas the national security adviser to the UPA government, suffered aguilty conscience for not bringing the truth about Rajiv Gandhi's killing by not producing the crucial video cassette passedon to him, in his then capacityas IB chief.

Instead, he manipulated to get Shivshankar Menon elevated as foreign secretary, super seding 14 competen to officers senior to him and helped evolve a new SriLankan policy of pretending to help the Tamils and extending all military support to annihilate the LTTE.

> The failure of the United Nations to protect Tamil civilians was symptomatic of the indifference of the world as a whole.

Claiming the war was ledby “Erik Solheim, Norway's chief peace negotiator, who claims to have easy access to Indian intelligence, says: “Never, ever did any Indian official hintthata military victory was possible until mid-2008. Then they started, Imean Iobserved the changein Narayanan and others, gradually shifting to the position that maybe, still may be only, that the government can wipe out the Tigers militarily. Before that, no one though tit was possible.”

If what the Norway report says and Solheim impliesaretrue, New Delhi has much to answer about and bearpartial responsibility for the serious war crimes, amounting to genocide,levelled against Rajapaksa.

India is seen as having repeatedly broken its pledges to defend their rights and protect their lives, especially during the final phase of the war in 2009

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன் மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூ - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com


*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# தமிழ் அரசியல் பிரமுகர்களின் சர்வதேசக் கரகாட்டம்!!!

**மௌலி**

*(ஒரு பேப்பருக்காக)*

அமெரிக்கா, தென்னாபிரிக்கா, ஜெர்மனி என மூன்று கண்காட்சிகளை நடாத்த கரகாட்ட கோஷ்டிகள் அதற்கான ஒத்திகை , பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றன. அதே நேரம் இந்த கரகாட்டத்துக்கு ஏற்றவாறு மூளைச் சலவை செய்தல் வெட்டி ஓடுதல் என்பனவும் நடைபெறுகின்றன.

கரகாட்ட கோஷ்டிகள் தெரிவு செய்துள்ள நடன முறைகள் பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரத்தினை ஒட்டியதாகவோ அல்லது வேறெந்த பாரம்பரியநாட்டியங்களையும்ஒத்ததாக இருக்கப் போவதில்லை. மாறாக நோர்வேசியர்களினதும், அதிகார மையங்களினதும் அவர்களால் வழி நடாத்தப்படுபவர்களினதும் நெறிப்படுத்தலில் நடனக்கலையின் தத்துவம் எதனையும் கவனத்தில் கொள்ளாது இருப்பதனால் கலைக்கும் கரகாட்டத்துக்கு தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை. தாளம் பிழைத்து தலையில் இருக்கும் கரகம் விழுவதுபோல் அத்தனை உடன்பாடுகளும் நொருங்கும் ஆபத்து நோக்கியே இந்த கரகாட்டக்கோஷ்டிகள் ஆட்டத்திற்கு தயாராகுகின்றன.

ஜெர்மனி நோக்கிய கரகாட்டத்தை பரபரப்புடன் மேற்பார்வைசெய்யும்உலகத்தமிழர்பேரவையின் சுரேன் சுரேந்திரன் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இணைந்து ராஜபக்சே ஆட்சியை வீழ்த்தி இன்னொரு விக்கரமசிங்கவையோ, அல்லது சமர விக்கிரமவையோ கொன்டு வந்தால் இனவாத கொக்கு மயக்க நிலையில் இருக்கும் அப்பொழுது அதனை லபக்கென்று பிடித்துவிடலாம் என 'அதிகாரங்களின் முகவர்கள்' சொன்னதை முழுசா விழுங்கியபின் சமிபாடு இல்லாமல் திரிகின்றார். பாவம் சுரேன் நல்ல மனம் உள்ள மனுசன். எங்கடை சனத்துக்கு துன்பம் இல்லாமல் போகவேண்டும் என்று ஆசைப்படுறார். ஆனால் பிரச்சனை என்னவென்றால் அமெரிக்கா , கனடா, ஐரோப்பா போன்ற நாடுகளை விட இந்தியாவில் தான் பெண்களுக்கு மதிப்பு, உரிமை அதிகம் எண்டு சொல்லுமளவுக்கு அவருடைய அரசியல் அறிவு இருக்கிறது. அவருக்கு சிங்கள மக்களின் பொதுப் புத்தி புரியவில்லை. பிரித்தானிய தமிழர் பேரவை சார்பில் அதிகாரம் அளிக்கப்படாத பிரதிநிதி எதுவும் பேசலாம் என்று விட்டுவிட முடியாது.

மங்கள சமரவீரவை சந்திப்பதன் மூலம் எதனை சாதிக்க முனைகிறார்கள்?

மங்கள சமரவீர போன்றவர்கள் தமது பிரதேச மக்களின் வாக்குகளில் தங்கியிருக்கும் அரசியல்வாதிகள். அதன் மூலமே அவர்களுக்கு அதிகாரமும் பொருளாதார வளமும் கிடைக்கிறது. சிங்கள மக்களின் வாக்கு வங்கியை இழந்து அவர்கள் தமிழர்களின் உரிமையை ஆதரிப்பார்கள் என எதிர் பார்ப்பது என்பது பகற்கனவாக மட்டுமே இருக்க முடியும். இதற்கு அதிகம் சிந்திகத் தேவையில்லை சேர் ஜோன் கொத்தலாவல காலத்திலிருந்தான பட்டறிவு போதுமானது.

மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சராக இருக்கும்போது தமிழர்களுக்கு உரிமை வழங்கும் விடயத்தில் கூறிய கருத்துகள் விக்கிலிக்ஸ் இல் உள்ளது.அது என்னவென்றால், இனவாதம் பேசினால்தான் ஆட்சியில் இருக்க முடியும். ஆட்சியில் இருந்தால்தான் தமிழர் உரிமை பற்றி ஏதாவது செய்யலாம். ஆனால் தமிழரருக்கு உரிமை வழங்க இனவாத வாக்கு வங்கி ஒத்து வராது. ஆதலால் ஆட்சியை கைப்பற்ற முடியாது.

இது வாக்கு -அதிகாரம் - நோக்கு என்ற மூன்று விடயங்கள் தொடர்பான தர்க்கவியல் கேள்வி. முப்பரிமாண தர்க்கம் எனக் கூறமுடியும். இதில் பல தெரிவு முறைகள் உருவாக்கலாம். ஆனால் வாக்கு என்ற அலகு இன்றி, நோக்கு சாத்தியமாகாது. நோக்கு வாக்குக்கு முரணானதாக இருந்தால். முப்பரிமாண தெரிவுகளில் ஒன்றான நோக்கு சாத்தியப்படாது. ஏனெனில் அதிகாரம்இன்றி நோக்கு சாத்தியம் இல்லை. வாக்கு இன்றி அதிகாரம் சாத்தியமில்லை .

ஆட்சி மாற்றத்துக்கான தமது கூட்டாளிகளிடம் இந்த கரகாட்டக்காரர் சொல்ல வேண்டியதை நெல்சன் மண்டேலாவிடம் இருந்து நாம் உதாரணம் தேடிக் கொள்ளலாம். 1985 ஆம் ஆண்டு நடந்த சம்பவம் இது. தென்னாபிரிக்க இனவெறி அரசுக்கு எதிரான ஆயுதப் போர் நடந்து கொண்டிருக்கின்றது, நெல்சன் மண்டேலா சிறையில் இருக்கின்றார். அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள் தென்னாபிரிக்க தேசிய காங்கிரசை பயங்கரவாத இயக்கமாக தடை செய்திருக்கின்றார்கள். உலகில் வலிமைமிக்க நாடுகள் சரணடையுங்கள் என்று தென்னாபிரிக்க விடுதலை இயக்கம் மீது அழுத்தம் பிரயோகிக்கின்றன. நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்கின்றோம் சரணடையுங்கள், சமாதான ஒப்பந்தம் செய்யுங்கள் என பலம்மிக்க நாடுகள் அறிவுறுத்துகின்றன. இங்கேயும் பல் பரிமாண அரசியல் . கைதி - சிறையில் இருந்து விடுதலை - சரணடைவு - உரிமை.

இங்கே உரிமை என்பது எட்டப்படவேண்டும், அதுதான் நிபந்தனை. இந்த சூழ்நிலையில் நெல்சன் மண்டேலா எழுதிய கடிதம் இப்படி இருந்தது ,

" தென்னாபிரிக்க மக்களின் விடுதலை அமைப்பான UDP கட்சியின் சீருடையான மஞ்சள் ரீ சேர்ட் அணிந்திருந்த ஆங்கிலிக்கன் பாதிரியார் டெஸ்மன்ட் ருட்டு அவருக்கு அருகில் நெல்சன் மண்டேலாவின் 25வயது மகன் ஜிண்ட்சி மண்டேலாவும், சுவாட்டோ மைதானத்தில் இனவாதத்துக்கு எதிரான தமது அமைப்பின் ஆதரவாளர் 9000 பேர் முன் சில கணங்கள் மௌனமாக நின்றார்கள். அதன் பின்அவரது தந்தை சிறையில் இருந்து எழுதிய கடிதத்தை வாசித்தார் ஜிண்ட்சி,

*"நீங்களும் நானும் எனது மக்களும் சுதந்திரமாக முன் எந்த உடன்படிக்கைக்கும் உடன்பட என்னால் முடியாது, நான் ஒத்துக் கொள்ளவும் மாட்டேன். சுதந்திர மனிதர்கள் மட்டுமே உடன்படிக்கை செய்ய முடியும். கைதிகள் உடன்படிக்கை செய்ய முடியாது"* .......என தொடர்ந்தது தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலாவின் அந்த வரலாற்று முக்கியம் மிக்க கடிதம்.

ஒரு நாட்டு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இராணுவத்தை எங்கு வேண்டுமானாலும் நிறுத்தும் அதிகாரம் அரசுக்கு உண்டு . வடக்கு கிழக்கில் உள்ள இராணுவம் தமிழ் மக்களை பிரதிநிதிதுவப்படுதவும் இல்லை. அவர்களை பாதுகாக்கவும் இல்லை.

தமிழ் மக்களை எந்த வகையிலும் பிரதிநிதித்துவ படுத்தாத , எமது பிரதேசம் மீது ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள பவுத்த இராணுவம் முற்றாக வெளியேற்றப்பட்டு அங்கு அச்சுறுத்தலற்ற ஜனநாயக சூழல் ஏற்பட்டால் மட்டுமே மக்களும் தலைவர்களும் சுயாதீனமாக இயங்க முடியும். இராணுவ அச்சுறுத்தல் மத்தியில் பணயக் கைதிகளாக இருக்கும் எமது அரசியல் தலைவர்களான சம்பந்தன் முதல் வேறெவர் 'இராணுவ ஆக்கிரமிப்பி நிலையில்' அஞ்சியோ அல்லது விலை போயோ எந்த ஒப்பந்தம் செய்தாலும் அது தமிழர் தேசத்தின் தலைவிதியை தீர்மானிப்பதாக அமையாது.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

**ஆகாது—முடியாது—நடக்காது !**

நீராவிப் படகை கண்டு பிடித்த Robert Fulton முதன் முதலில் அதைப் பொது மக்கள் மத்தியில் செயல்படுத்திக் காட்ட முயன்ற போது அது உடனடியாகக் கிளம்பவில்லை. ஓரமாக நின்று பார்த்துக் கொண்டு இருந்தவர்கள் "இதெல்லாம் ஸ்டார்ட் ஆகாது. இந்தப் புதிய வகைப் படகு வேலை செய்யக் கூடியதல்ல. வேண்டுமானால் பாருங்களேன்" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் சொன்னது போல அது கிளம்ப நேரம் ஆகியது. நேரம் ஆக ஆக முடியாது என்று சொல்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வந்தது.

திடீரென்று படகு பெரும் சத்தத்துடன் கிளம்பியது. அதைக் கண்டு ஓரிரு நிமிடங்கள் வாயடைத்து நின்றவர்கள் பின்பு சொல்ல ஆரம்பித்தார்கள். "ஏதோ கிளம்பி விட்டது. ஆனாலிதை நிறுத்த முடியாது. வேண்டுமானால் பாருங்கள்"

இப்படிப்பட்ட விமரிசகர்கள், ஆகாது-முடியாது-நடக்காது என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டிருப்பவர்கள் உலகில் என்றும் எங்கும் அதிகமாகவே இருக்கத் தான் செய்கிறார்கள். ஒரு வேளை யாராவது நடத்திக் காட்டி விட்டாலும் "இதெல்லாம் ரொம்ப நாளைக்கு நடக்காது" என்றோ, செய்து காட்டியதில் உள்ள சின்னச் சின்ன குறைகளைத் தேடிப்பிடித்து சுட்டிக்காட்டியோ திருப்திப்படும் negative மனிதர்கள் இவர்கள்.

பல பேருடைய ஆகாது-முடியாது-நடக்காது அறிவுபூர்வமான ஆராய்ச்சி மூலமாகவோ, ஆழ்ந்த அனுபவ மொழியாகவோ இருப்பதில்லை என்பது வருத்தத்துக்குரிய விஷயம். தங்கள் அறிவுக் கெட்டாதவைகளையும், தங்களால் சாதிக்க முடியாதவைகளையுமே இவர்கள் இப்படி சொல்லத் துவங்குகிறார்கள்.

எல்லா நல்ல காரியங்களும், சாதனைகளும், இவர்களைப் பொருட்படுத்தாமல் முயல்வதாலேயே நடக்கிறது. யாராவது இவர்களைப் பொருட்படுத்தி தயங்க ஆரம்பித்தால் அவர்கள் சாதனைகள் குறைப் பிரசவத்தில் உயிரிழக்கின்றன. எத்தனை அருமையான எண்ணங்கள், அருமையான திட்டங்கள் இப்படி மற்றவர்களது எதிர்மறை நோக்குகளாலும், பேச்சுகளாலும் விதையிலேயே கருகி விடுகின்றன என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

பெரிய சரித்திரம் படைக்கும் விஷயங்களில் மட்டுமல்ல, சின்னச் சின்ன தினசரி வாழ்க்கை விஷயங்களில் கூட இந்த மனிதர்கள் மற்றவர்கள் வாழ்க்கையைத் தேக்கமடையச் செய்து விடுகிறார்கள். மற்றவர்களது திறமைகளை "இது பெரிய விஷயமில்லை, இதனால் பெரிய பயன் இல்லை" என்றெல்லாம் சொல்லி முளையிலேயே கிள்ளி விடும் இவர்கள் சில சமயங்களில் தயாராக சில உதாரணங்களையும் வைத்திருப்பதுண்டு. "இப்படித் தான் எனக்கு தெரிஞ்ச ஒருத்தன்...."

தங்கள் பாதையில் அளவு கடந்த நம்பிக்கையும், சாதிக்க வேண்டும் என்ற ஆர்வமும் உடையவர்கள் மட்டும் இது போன்றவர்களின் கருத்துகளால் பெரிதும் பாதிக்கப்படுவதில்லை. அப்படி உறுதியாக இல்லாதவர்கள் போகின்ற பாதை சரியாக இருந்தாலும், தங்கள் பாதையில் சந்தேகம் கொண்டு பயணத்தை நிறுத்தியோ, மாற்றியோ தங்கள் தனித்தன்மையை இழந்து விடுகிறார்கள்.

எனவே இப்படி எல்லாவற்றையும் அவநம்பிக்கையோடு பார்ப்பவர்களிடம் இருந்து எச்சரிக்கையாக விலகி இருங்கள். அவர்களை ஒரு பொருட்டாக நினைக்காமல் இருப்பது மிக நல்லது. அவர்களுக்குப் புரிய வைக்கவோ, உங்கள் தரப்பு வாதங்களை தெளிவு படுத்தவோ முயலாதீர்கள். அது வீண். எதையும் திறந்த மனதோடு கேட்டு தீர்மானிப்பவர்களாக இது போன்ற மனிதர்கள் என்றும் இருப்பதில்லை. முன்பே தீர்மானித்து விட்டவர்களிடம் நீங்கள் விளக்க முயல்வது கவிழ்த்து மூடிய குடத்தில் தண்ணீர் நிரப்ப முயல்வதற்கு சமம். உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் உரிமையை அவர்களுக்கு எக்காரணம் கொண்டும் தந்து விடாதீர்கள்.

**கடைசியாக ஒரு வார்த்தை இந்த ஆகாது-முடியாது-நடக்காது என்னும் அவநம்பிக்கை சொற்களை நீங்களும் மற்றவர்களிடம் எப்போதுமே கவனக் குறைவாக பயன்படுத்தாதீர்கள்.**

இந்த நூற்றாண்டின் மிகக் கொடுமையான நோயாக எய்ட்ஸை சொல்வார்கள். நம் உடலின் நோய் எதிர்ப்புத் தன்மையை முற்றிலும் அழித்து எல்லா நோய்க்கிருமிகளின் தாக்குதல்களுக்கும் நம் உடலை எதிர்ப்பில்லாத இரையாக்குகின்றது இந்த நோய். இந்த அவநம்பிக்கையும் அதைப் போலவே கொடுமையானது. வாழ்க்கையில் சாதிக்கத் தேவையான நம்பிக்கையையும் கனவுகளையும் அழித்து எந்த சவாலையும் சந்திக்க முடியாத நிராயுதபாணியாக நம்மை ஆக்கி விடுகிறது இந்த அவநம்பிக்கை என்னும் நோய்.

கடைசியாக ஒரு வார்த்தை- இந்த ஆகாது-முடியாது-நடக்காது என்னும் அவநம்பிக்கை சொற்களை நீங்களும் மற்றவர்களிடம் எப்போதுமே கவனக் குறைவாக பயன்படுத்தாதீர்கள். அந்த நோயை இந்த சமுதாயத்தில் பரப்பும் சாதனமாக என்றுமே மாறி விடாதீர்கள்.

*- என்.கணேசன்*

# ஆட்சிமாற்றம் என்கிற மாயமான்




**கோபி**
*ஒரு பேப்பர்*

சிரானி பண்டாரநாயக்கவின் பதவிப் பறிப்புடன் மீண்டும் இராஜபக்சக்களின் சர்வாதிகார ஆட்சி பற்றி சர்வதேசம் கவலைப்படுவதாக செய்திகள் வெளிவருகின்றன. இது விடயத்தில், சர்வதேச முரண்பாடுகளுக்கான குழுவும் (ICG) தன் பங்கிற்கு அறிக்கை ஒன்றைவெளியிட்டுள்ளது. சிறிலங்காவின் நீதித்துறை அரசியல் மயப்படுத்தப் பட்டுள்ளது, பிரதமநீதியரசர் (அப்போது சரத் நந்தன சில்வா) தனது விருப்பிற்கேற்ப செயற் படுகிறார் என்பதெல்லாம் சர்வதேச சட்டவாளர்கள் சங்கத்தின் மனிதவுரிமை நிறுவனத்தினால் (International Bar Association's Human Rights Institute) 2010ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள். ஆகவேதான் சிரானி விடயத்தில் இவர்கள் காட்டும் ஆர்வம் விசித்திரமானதாகத் தெரிகிறது.

சர்வதேச அதிகாரமையங்களின் அதிருப்தியை சாக்காக வைத்து கொழும்பு மேட்டுக் குடியினரில் சிலர், இலங்கைத்தீவில் ‘அரபு வசந்தம்’ போன்றதொரு மக்கள் கிளர்ச்சி ஏற்படப்போவதாகவும், ஆட்சி மாற்றம் நிகழ்வதற்கான ஏது நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பேசி வருகின்றனர். இலங்கை மக்களின் கவனம் Hultsdorf நீதிமன்ற வளாகத்தை சுற்றியே இருக்கிறது எனசில சட்டவாளர்கள் கருதக் கூடும். ஆனால் சிரானிக்கு பதிலாக மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டால் சிங்கள மக்கள் கிளர்ந்து எழுவார்கள் என இவர்கள் ஏன் எதிர்பார்க்கிறார்கள் என்பது புரியவில்லை.

அண்மையில்,தமிழ் இணைய தளம் ஒன்றிற்கு கூட்டமைப்பின் நியமன உறுப்பினர் சுமந்திரன் வழங்கிய செவ்வியில், ‘இனி வீதியில் இறங்கிப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை’ என தெரிவித்திருந்தார். அவர் தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தைப் பற்றி பேசுகிறார் என்பதாகவே அவ்வூடகம் செய்தி வெளியிட்டிருந்தது. அச் செவ்வி வெளியான சில நாட்களில்,கொழும்பு தொலைக்காட்சி ஒன்றில் தோன்றிய ரணில் விக்கிரமசிங்க தாம் அரசாங்கத்திற்கு எதிராக வீதியில் இறங்கிப்போராடப் போவதாக கருத்து வெளியிட்டிருந்தார். ஆக இந்த இருவரும் ஒரே விடயத்தை அதாவது ஆட்சி மாற்றத்தை பற்றியே பேசுகிறார்கள் என்பது தெரிகிறது. வீதியிலிறங்கிப் போராடுவது பற்றி இரண்டு வீரியமற்றவர்கள் (impotent persons) பேசியிருப்பது, நடிகர் வடிவேலுவின் நகைச்சுவை காட்சிகளை நினைவுபடுத்தினாலும், வெளிச்சக்திகள் மீது கொண்டுள்ள அதீத நம்பிக்கையால் இவர்கள் இவ்வாறு பேசிகிறார்கள் என்பதனை புரிந்துகொள்ள முடிகிறது.

மேற்கின் அதிகாரமையங்களுக்கு ஏற்றதான அரசாங்கம் இலங்கைத்தீவில் இல்லை என்பதனையும் அது மாற்றப்படவேண்டும் என்பதில் அவை அக்கறையாக உள்ளன என்பதனையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவர்கள் விரும்புகிற வகையில் ஆட்சிமாற்றம் எவ்வாறு ஏற்படப் போகிறது என்பதனை சிறிலங்கா அரசாங்கத்துடனான் சர்வதேச உறவுகளே தீர்மானிக்கப்போகிறது.

அண்மைக்காலத்தில் மத்தியகிழக்கிலும், ஆபிரிக்காவிலும் உள்ள சில நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் உள்ளூர் மக்களின் எழுச்சிமிகு போராட்டங்கள் மூலம் ஏற்பட்டன. இவ்வாட்சி மாற்றங்களுக்கு மேற்கின் மறைமுகமான ஆதரவு இருந்தது. அங்குள்ள மக்கள் தமது ஆட்சியாளர்களையிட்டு மிகுந்த அதிருப்தி கொண்டவர்களாக இருந்தார்கள். ஆட்சியாளர்களை தேர்தல் மூலம் பதவியிறக்கம் செய்வதற்கான ஜனநாயக வழிமுறைகள் அவர்களுக்கு இருக்கவில்லை என்பதனால்,வீதியில் இறங்கிப் போராடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை. இவை எல்லாம் சரியான தகவல்கள்தான். ஆனால் ஆட்சிமாற்றத்தின் பின்னர் அங்கு சனநாயகம் மலர்ந்துள்ளதா என்ற கேள்விக்கு மேற்குறித்த நாடுகளில் உள்ள மக்கள் பதில் சொல்லமுடியாது திணறுகிறார்கள். இப்போது ஆடசியிலிருப்பவர்கள் முன்பிருந்த தலைவர்களை விட அதிகாரம் குறைந்தவர்களாகவும் மேற்கின் ஒழுங்குக்குள் நின்று செயற்படுபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதனை மாத்திரம் அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சியாளர்கள் விடயத்தில், அவர்கள் எல்லையற்ற அதிகாரங்களுடன் நீண்டகாலத்திற்கு ஆட்சிக்கட்டில் இருப்பதைத் தடுத்தால் மட்டுமே அவர்களை தம் வழிக்கு கொண்டுவர முடியும் என்பதில் மேற்குலக அதிகார மையங்கள் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளன. ஆகவே அதற்கான வியூகங்களை சர்வதேச அரசுசாரா நிறுவனங்களின் மூலம் நிறைவேற்றி வருகின்றன. செல்வந்தரான ஜோர்ஜ் சோரஸ் இன் OpenSocietyInstitute(OSI)போன்றஅரசுசாரா நிறுவனங்கள் ஆபிரிக்க நாடுகளில் சனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு பெருமளவு நிதியினைச் செலவிடுகின்றன.தேர்தல்களில் மக்களை வாக்களிக்கச் செய்தல், தேர்தல்கண்காணிப்பு போன்ற சனநாயகமயப் படுத்தும் செயற்திட்டங்களை இந்நிறுவனமும், அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் National Democratic Insititute (NDI) போன்ற மேற்கு நாட்டு நிறுவனங்களும் அமெரிக்க அரசின் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனமான USAID பிரித்தானிய அரசின் UKAID என்பனவற்றின் நிதியுதவியுடன்அமுல்படுத்தி வருகின்றன.

மேற்குறித்த நாடுகளில் கடைப்பிடிக்கும் அணுகுமுறையினை, சிறிலங்காவில் நடைமுறைப்படுத்த முடியாது. ஏனெனில், இந்நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கைத்தீவில் முறையான ஜனநாயக கட்டமைப்புகள் காணப்படுகின்றன. குறித்த கால இடைவெளியில் தேர்தல் மூலம் ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அரசியல் அமைப்பில் உள்ள போதாமைகள், ஜனாதிபதியிடம் குவிந்துள்ள அதிகாரம் போன்ற பல குறைபாடுகள் இருக்கின்றபோதிலும்,குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஜனநாயக முறைமை ஒன்று அங்குள்ளது. ஆகக்குறைந்தது மக்கள் தமது வாக்குகள் மூலம் ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்க முடிகிறது. ஆகவே ஆட்சியாளர்களை தேர்தலில் தோற்கடிப்பதுதான் இலங்கைத்தீவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரே வழிமுறையாக உள்ளது. ஏலவே இரண்டு தடவைகள் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2005ம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறவைக்க மேற்குலக அதிகார மையங்கள் விரும்பின. ஐக்கிய தேசியக் கட்சியின் வழமையான வாக்கு வங்கியுடன், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளும் இணைந்தால் ரணிலை ஆட்சிக்கட்டில் ஏற்ற முடியும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மேற்கின் இந்நிகழ்ச்சி நிரலுக்கு விடுதலைப்புலிகள் ஆதரவளிக்க மறுத்துவிட்டனர்.தேர்தலை புறக்கணிக்குமாறு விடுதலைப்புலிகள் கோரியதால் வடக்கு-கிழக்கில் மக்கள் வாக்களிக்கவில்லை. தனித்து சிங்கள மக்களின் வாக்குகளுடன் ரணிலால் வெற்றி பெறமுடியவில்லை. தேர்தல் புறக்கணிப்பு என்பது சாத்விகமான எதிர்ப்பு முறை என்றபோதிலும், விடுதலைப்புலிகளின் இப்புறக்கணிப்பு அவர்களை மேற்குலக சக்திகளிலிருந்து மேலும் அந்நியப்படுத்தியது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை புறந்தள்ளிவிட்டு தாம் யாருடைய நிகழ்ச்சித் திட்டதிற்கும் ஆதரவளிக்கப்போவதில்லை என்பதனை இத்தேர்தல் புறக்கணிப்பு மூலம் விடுதலைப்புலிகள் அழுத்தம் திருத்தமாக தெரிவித்திருந்தனர். விடுதலைப்புலிகளின் இந்நிலைப்பாடே ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடைசெய்தமைக்கு காரணமாக அமைந்தது. இது விடுதலைப்புலிகள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்ற மேற்கின் தீர்மானத்திற்கு வலுச்சேர்ப்பதாகவும் அமைந்தது. விடுதலைப்புலிகள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவுவழங்கியிருந்தால், அவர் சிங்களமக்களாலேயே தோற்கடிக்கப்பட்டிருப்பார் என்பதனை மேற்குலக சக்திகள் அப்போது எதிர்பார்த்திருக்கவில்லை என்றே தெரிகிறது. ஆனால் அதனை 2010 ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பினனர் உணர்ந்திருப்பார்கள் என நம்ப இடமுண்டு.

2010இல் நடைபெற்ற அடுத்த சனாதிபதி தேர்தலில் மேற்குலக சக்திகளின் தெரிவான சரத் பொன்சேகாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும்ஆதரவு வழங்கின. இனப்படுகொலைக்கு தலைமைதாங்கி நடாத்திய இராணுவத் தளபதியை ஆதரித்ததன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை காற்றில் பறக்கவிட்ட தமிழ்தேசியக்கூட்டமைப்பு சரத்பொன்சேகாவிற்கு தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொடுத்த போதிலும்,தனித்து சிங்கள மக்களின் வாக்குகளுடன் மகிந்த இராஜபக்ச வெற்றியீட்டினார். சிங்களத் தேசியவாதம் மீண்டும் ஒருதடவை மேற்குலக சக்திகளை தோற்கடித்தது.

**மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சியாளர்கள் விடயத்தில், அவர்கள் எல்லையற்ற அதிகாரங்களுடன் நீண்டகாலத்திற்கு ஆட்சிக்கட்டில் இருப்பதைத் தடுத்தால் மட்டுமே அவர்களை தம் வழிக்கு கொண்டுவர முடியும் என்பதில் மேற்குலக அதிகார மையங்கள் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளன. ஆகவே அதற்கான வியூகங்களை சர்வதேச அரசுசாரா நிறுவனங்களின் மூலம் நிறைவேற்றி வருகின்றன.**

இச்சம்பவங்கள் மூலம் கற்றுக் கொண்ட பாடங்களின் விளைவாக இப்போது வேறுவிதமான அணுகுமுறை கையாளப்படுகிறது. அதாவது சிங்கள மக்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் ஏற்புடையதான கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மாற்ற முயற்சிகள் நடைபெறுகிறது. சம்பந்தனும் ரணில் விக்கிரமசிங்கவும் சேர்ந்து சிங்கக் கொடி பிடிப்பதும், வடக்கு கிழக்கில் இராணுவம் நிலைகொண்டிருப்பதனை ஏற்றுக்கொள்கிறோம் என்றும், விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்றும் சம்பந்தன்கூறுவதும் மேற்கத்தைய எஜமானர்களின் அறிவுறுத்தல்களே தவிர வேறொன்றுமில்லை. போர்க்குற்றங்கள் பற்றிய விசாரணை அல்ல ஈருறுளிகளே எங்களது மக்களின் தேவை என சம்பந்தன் கூறுவதும் இதன் தொடர்ச்சியாகவே பார்க்கவேண்டும்.

சிங்களப் பேரினவாதத்தை மட்டுமே மூலதனமாக வைத்து பெரும்பான்மை மக்களின் ஆதரவை பெறும் அரசியல் நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் வரை, அதாவது சிங்களப் பேரினவாதம் கருவறுக்கப்படும்வரை இலங்கைத் தீவில் ஆட்சி மாற்றம் எந்த மாற்றத்தினையும் ஏற்படுத்தப் போவதில்லை என்பதனை மேற்கத்தைய கொள்கை வகுப்பாளர்கள் எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

## ஒரு பேப்பர்

கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ............... 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran ............. 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ............. 020 8540 8192

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video............ 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra .................. 020 8333 8680
Eelam Shop ............ 020 8690 6545
Katpagam ............. 020 8694 8810
AJ Video ................ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS ...................... 020 8297 9432

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan .................. 020 8514 1744
Angels .................. 020 8553 0490
Sri Supermarket .....

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans ............. 020 7609 1912
Prabas ................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan ................ 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods............... 020 8900 0100
Vahizan Disc.......... 020 8795 0648

**Ealing**
Amman kovil.......... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ..... 020 8813 9126
Palm Palace ........... 020 8574 9209
Spicy Palace restaurant 020 8574 4087
Luxmys C & C......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret .......... 020 8571 4434

After eight years
in Canada......
Now in UK and Europe

www.you-tv.net

# YOU-TV

PO.Box 52314 1711, Mccowan Road, Toronto, ONT, Canada M1S5G8

**More than 50 Tamil Channels**
(Jaya tv, Jaya Max, Raj, Captain, Makkal, Mega, GTv, Zee Tamil and more)

**More than 1000 other Channels**
(Tamil, Hindi, Telugu, Marathi, Malayalam, kannada, Bengali, Punjabi,English, German, French, Pakistan,other)

10 Christian Channels

More than 3000 tamil movies

All in one android box

More than 2000 other movies

**Watch all channels without a Satellite... Or cable connection**

IF YOU RECOMMENDED SOMEONE YOU WILL GET ONE MONTH FREE

PRICE FROM £ 149.00 TO £ 249.00

Mobile - 074 2359 7546
Mobile - 074 2359 7547
email - youtvsales@gmail.com

# திருமலையில் பேசிய வீர வசனத்தை சர்வதேச அரங்கிலும் சொல்வாரா சம்பந்தன் ?



மீண்டும் வீர வசனங்களை அள்ளி வீச ஆரம்பித்துள்ளார் இரா.சம்பந்தன். அதாவது, தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பை இல்லாதொழிக்க சிங்களம் முயற்சிப்பதாகவும், தமிழ் மக்களின் பிறப்புரிமையை பறிக்க எவரையும் அனுமதிக்க முடியாதெனவும் சம்பந்தன் கூறிய வீர வசனங்கள் ஊடகங்களில் பரவலாக இடம் பிடித்திருந்தது.

அதுமட்டுமல்லாது, எதிர்வரும் மாதங்களில் சாதகமான மாற்றங்கள் ஏற்படலாமென்றும் அவர் எதிர்வு கூறியுள்ளார்.

அமெரிக்காவின் வசந்த அழைப்பும், தென்னாபிரிக்கா பயணமும், மார்ச் மனித உரிமைப் பேரவையில் சிங்களத்திற்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேறும் என்கிற எதிர்பார்ப்பும் இணைந்து, சாதகமான மாற்றங்களைக் கொண்டு வரும் என்பதுதான் சம்பந்தனின் கணிப்பு. இவ்வகையான பிழைத்துப்போன கணிப்பீடுகளின் பின்னடைவு வரலாறுகளை நாம் பல தடவைகள் எதிர்கொண்டுள்ளோம்.

வீர வசனங்கள் பேசும்போது, தேர்தல் மழைக்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்பதாகவும் எடுத்துக் கொள்ளலாம். அது வட மாகாண சபைத் தேர்தலாகவும் இருக்கலாம்.

இருப்பினும் எப்போது தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதனை சகல வல்லமை பொருந்திய மகிந்தரே தீர்மானிப்பார் என்பது தான் உண்மை.

மாகாணசபைத் தேர்தல் குறித்து ,உலக மகா கருத்துருவாக்கிகளான 'சர்வதேச நெருக்கடிக் குழு' [ICG] எத்தனை பரிந்துரைகளை வழங்கினாலும், சிங்களம் அசையப்போவதில்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அச்சுறுத்தல்களுக்கு நாம் அடிபணிய மாட்டோமென்கிற செய்தியை , தேசப்பற்றுள்ள அமைப்புக்களின் கூட்டமைப்பு ஊடாக, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மகிந்த ஆட்சியாளர் வெளிப்படுத்தி வருவதைக் காண்கிறோம்.

இம்மாதம் 26 ஆம் திகதியன்று , அமெரிக்க இராஜாங்க திணைக்கள பிரதி உதவிச் செயலாளர்களான விக்ரம் சிங் , ஜேம்ஸ் மூர் மற்றும் ஜேன் சிமர்மான் போன்றோர் இலங்கைக்கு விஜயம் செய்வதாக செய்தி வெளிவந்தவுடன், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கடும் கண்டனத்தை வெளியிட ஆரம்பித்துள்ளார். பேரினவாதம் மேற்கொள்ளும் இன ஒடுக்குமுறையை மூடிமறைக்கும் கருவியாக, ஏகாதிபத்திய எதிர்ப்பு தொழில்படும் என்று அவர் முடிவெடுத்து விட்டார் போல் தெரிகிறது.அதே வேளை இம்மூவரின் வருகை, ஜெனீவா இராஜதந்திரச் சமருக்கு அமெரிக்கா விடுக்கும் அறைகூவல் என்பதாக அமையும் என்கிறார் இந்தக் கலாநிதி.

அதாவது பயணிப்பவர்களின் நிகழ்ச்சி நிரலில், அரசியல் தீர்வொன்று உடனடியாக எட்டப்பட வேண்டும் என்கிற விடயம் உள்ளடக்கப்படலாம் என்று இச் சிங்கள கடும்போக்கு வாதிகள் பதட்டமடைகிறார்கள். அவ்வாறெல்லாம், அமெரிக்காவின் திட்டத்தில், 'தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை கொடு' என்பதான பிறப்புரிமைக் கோட்பாடுகள் இருக்கப்போவதில்லை. அதனை சர்வதேச நெருக்கடிக் குழுவும் தெளிவாக முன்வைத்து விட்டது.

"நீங்கள் எந்தவகையான அழுத்தங்களையும் எமக்குக் கொடுக்கலாம். ஆனால் தீர்வு குறித்த விடயத்தில் மட்டும் தலையிடாமல் இருந்தால் போதும்" என்பதுதான் ஒட்டுமொத்த பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளின் பெருவிருப்பாக இருக்கிறது. அதனையும் மீறி எம்மீது போர்க்குற்றங்கள் , மனித உரிமை மீறல்கள், இன அழிப்பு என்கிற பேராயுதங்களை பிரயோகித்தால், நாம் சீனாவிடம் சரணடைவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்பதனை குணதாச அமரசேகர மட்டுமல்ல கோத்தபாய இராஜபக்சேவும் சொல்ல ஆரம்பித்து விட்டார். இந்த சீனச் சரணடைவுதான் எமக்கான முதல் வாசலைத் திறக்குமென தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதனைத் தடுப்பதற்காகவே மேற்குலகும் இந்தியாவும் பல காய்நகர்த்தல்களை தீவிரமாக மேற்கொள்கின்றன.

அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய, இலங்கைப் படையினருக்கு புலமைப்பரிசில்களை வழங்காவிட்டால் சீனாவிடம் செல்வோம் என்று அமெரிக்காவை எச்சரித்திருந்தார். முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை புரிந்த கட்டளைத் தளபதிக்கு பயிற்சி வழங்கினால், மனித உரிமைச் சங்கங்கள் போர்க்கொடி தூக்கி தம்மீது அழுத்தங்களைக் கொடுக்கும் என்பதால், அதனை நிராகரித்ததாக அமெரிக்கத் தரப்பு சொல்வதை கோத்தபாய ஏற்றுக்கொள்ளவில்லை. வேறு யாரையும் அனுப்புங்கள் நாம் பயிற்சி கொடுக்கின்றோம் என்பதுதான் அமெரிக்காவின் நிலைப்பாடு.

ஆகவே சிங்களத்தின் உறவினை முற்றுமுழுதாக முறித்துக்கொள்ள அமெரிக்கா விரும்பவில்லை என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். கோத்தபாயாவின் இச்செய்தி இந்தியாவிற்கும் பொருந்தும். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை, அமெரிக்கா போன்று போர்க்குற்ற அழுத்தங்களை சிங்களத்தின் மீது பிரயோகிப்பதில்லை. வெளிநாட்டமைச்சர் ஜி.எல். பீரிஸை அழைத்து, இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்தே இந்தியா பேசும்.

இந்தியாவின் வழி நடத்தலில் பயணிக்கின்றோம் என்று பிடி கொடுக்காமல் பேசும் கூட்டமைப்பினர் மத்தியில், அந்தப் பயணப் பாதை முட்களால் நிரம்பிய வலி நிறைந்த பாதை என்று கூறத் தொடங்கி விட்டார் சுரேஷ் பிரேமச்சந்திரன். இலங்கை குறித்தான இந்தியாவின் கொள்கையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று எதிர்ப்பார்க்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளர், தற்போது தென்னாபிரிக்கா எடுக்கும் முயற்சியிலும் நம்பிக்கை இல்லை என்கிறார்.

## அரசியல் பார்வை

**இதயச்சந்திரன்**

ஆனாலும் தென்னாபிரிக்காவின் நகர்வில் நம்பிக்கையற்றவர்கள், உலகத் தமிழர் பேரவையின் பொதுப் பிரகடன மேடையில் ஏன் கலந்து கொள்கிறார்கள் என்று புரியவில்லை. அமெரிக்கப் பின்னணியில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்காமல் தவிர்த்தால், சம்பந்தன் கூறும் 'மாற்றங்கள் ஏற்படும்' என்கிற வீர வசனம் அர்த்தமற்றதாகி விடும் என்பதால் கலந்து கொள்கிறார்களோ தெரியவில்லை.

வல்லரசுகள் பயன்படுத்தும் மென்போக்கு, கடும்போக்கு இராஜதந்திரங்கள் , யாருடைய நலன்களுக்காகப் பிரயோகிக்கப்படுகின்றது என்பதனைப் புரிந்து கொள்ளாவிட்டால், எல்லாமே எமது நன்மைக்காகத்தான் நடக்கிறது என்று மக்களை ஏமாற்ற இலகுவாகவிருக்கும்.

உதாரணமாக, யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் கைது குறித்து ,ஒட்டு மொத்த உலகத் தமிழ் சமூகமும் வெகுண்டெழுந்த போது மௌன விரதமிருந்த வல்லரசாளர்கள், சிங்கள அதிகார மையம் பிரதம நீதியரசி சிராணி பண்டாரநாயக்க மீது குற்றப்பிரேரணையை முன்வைத்தவுடன், இலங்கையின் ஜனநாயக மணி உடைந்து விட்டதென ஆர்ப்பரித்தார்கள்.

18 வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது அசிரத்தையாக இருந்தவர்கள், அச் சட்டம் வழங்கிய அதிகாரத்தைக் கொண்டு சிராணியைப் பதவியிலிருந்து நீக்கியவுடன் , நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும், அரசியலமைப்பையே மாற்ற வேண்டும் என்கிறார்கள்.

ஆட்சியை மாற்றினால் எல்லாமே மாறிவிடும் என்போர், அரசியலமைப்பில் முழுமையாக மாறுதல்களை ஏற்படுத்தாமல் , தேசிய இனச் சிக்கலுக்கு தீர்வினைக் கண்டடைய முடியாது என்பதையாவது புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு சரத் போன்செக்கா, அல்லது ரணில் விக்கிரசிங்கா அல்லது புதிதாகக் களமிறக்கப்படவுள்ள சந்திரிக்கா குமாரணதுங்க பதவிக்கு வந்தாலும், பௌத்தமே நாட்டின் மதம், சிங்களமே நாட்டின் ஆட்சி மொழி என்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட குடியரசு யாப்பினை புறந்தள்ள, மகா நாயக்க தேரர்களும் அஸ்கிரிய பீடாதிபதிகளும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கப் பிதாமகர்களும் அனுமதிப்பார்களா?. இனவாத அரசியல் பேசாமல் இவர்களால் தேர்தலில் வெற்றி பெற முடியுமா?.

பிடியாணை இல்லாமல் கைது செய்யப்பட்ட ஒருவரை , 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றின் முன் நிறுத்த வேண்டும் என்கிற சட்டத்தை, 48 மணி நேரமாக அதிகரித்துள்ளது இலங்கை நாடாளுமன்றம். ஆனால் பயங்கர வாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள். அவர்களுக்கு வெலிக்கந்தை முகாமில் 'புனர்வாழ்வு' அளிக்கலாம். நீதி மன்றம் இது குறித்து கேள்வி எழுப்ப முடியாது. தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் முறையிட்டால், அதற்கு எதிராக ஒரு வழக்குப் போடுகிறோம் என்று வீர வசனம் பேசுவார்கள். இவர்கள் போடும் வழக்குகள் சிங்களத்தின் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்துமே தவிர , தீர்வினைப் பெற்றுக் கொடுக்காது.

ஆக மொத்தம், மக்களின் இறைமை தற்போது மகிந்தரின் கைகளிலும் , நாடாளுமன்ற வளாகத்துள் மட்டுமே அடங்கிக் கிடக்கிறது. ஆனால் இங்கு தமிழ் பேசும் மக்களின் இறைமை பற்றி பேச வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் அது சிங்கள ஆட்சியாளர்களின் கைப்பிடிக்குள் 1948 இலிருந்து அமுங்கிக் கிடக்கிறது. அதனை மீட்கப் போராடியவர்களையே, ஜனநாயக மறுப்புவாதிகள் என்று சிங்கள நாடாளுமன்றில் சம்பந்தன் கூறியிருந்தார்.

'சுயநிர்ணய உரிமை' என்கிற தமிழினத்தின் பிறப்புரிமையை ஏற்றுக் கொள்ள மறுக்கும், சர்வதேச நெருக்கடிக் குழு மற்றும் இப்பிரச்சினையில் தலையிடும் வல்லரசு நாடுகளிடம் , எமது பிறப்புரிமையை விட்டுக்கொடுக்க முடியாதென சம்பந்தனால் கூற முடியுமா?.

திருமலையில் பேசிய இந்த வீர வசனத்தை, சர்வதேச அரங்கிலும் சம்பந்தன் சொல்வாரா? பொறுத்திருந்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லையென்று நினைக்கின்றேன்.

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service | Community Legal Service | The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk
Emergency 079 4764 1876 079 1225 3418

# பெரிய பிரித்தானியாவில் இருந்து திருப்பி அனுப்பப்படும் அகதிகளின் அவலநிலை..




**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

ஒய்யாரக்கொண்டையைத்தான் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க விரும்புகிறோம். ஒருவருக்கும் உள்ளே இருக்கின்ற பேனும், ஈருமாக இருக்கும் பிரச்சனைகளை பார்ப்பதில் நாட்டம் இல்லை. நாம் நாட்டைவிட்டு வந்த காலத்தை விட, இப்போ அதைவிட கொடுமையான பிரச்சனைக்குள் உயிரைப்பிடித்துக்கொண்டு வந்து, இங்குள்ள தடுப்புமுகாம்களில் சொல்லணாத்துயரங்களை அநுபவிக்கும் எமது உடன்பிறப்புக்களின் நிலையையே இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

இன்று வரை இலங்கைக்கு தமிழர்கள் அவ்வப்போது திருப்பி அனுப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எல்லா நேரங்களிலும் அது பெரிய செய்தியாக்கப்படுவதிலலை. மிகவிரைவாக, மிகவும் குறைந்தளவு நேர அவகாசத்தில் அவர்களுக்கு நடக்க இருப்பதை அவர்கள் உணர்ந்து அதற்கெதிராக ஆயத்தங்களை செய்ய முன்னரே சிலர் பலாத்காரமாக விமானத்தில் ஏற்றி, அவர்கள் உயிர் தப்பிப் பிழைத்து ஓடி வந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பப்படுகின்றார்கள். சில சந்தர்ப்பங்களில் சட்டபூர்வமாக திருப்பி அனுப்ப முடியாது. அச் சந்தர்பங்களின் விளக்கத்தை பார்போம்

எப்போது உங்களை சட்டபூர்வமாக திருப்பி அனுப்பமுடியாது?

1. உங்களுடைய அகதிகள் விண்ணப்பப் பத்திரம் Home Office இலோ அல்லது வழக்கு மன்றத்திலையோ உள்ளபோது.

2. நீங்கள் Appeal பண்ணியிருந்தால் நீங்கள் உங்கள் Barrister மூலம் " a stay of Removal" என்பதை Judge ஊடாக இரவோ, பகலோ எந்த நேரமும் பெற்றுக்கொண்டு அதை வைத்திருக்கும் பட்சத்தில்.

3. உங்கள் குழந்தை, பிரித்தானிய வதிவிட உரிமையை பெற்றிருக்கும் பட்சதில்

4. இதைத்தவிர நீங்கள், புதிதான தகவல்களின் கீழ் மூடப்பட்ட உங்கள் வழக்கை மீள எடுத்திருந்தால் (புதிதான தகவல்களின் கீழ், உங்களுக்கு முன்பு நடந்த துன்புறுத்தல் பற்றி முதல் தடவை பேசுதல் (வன்புணர்வு உட்பட) . நாட்டில் இருந்த வந்த தகவல் சான்று, மிக அண்மையில் உங்களுடைய நாட்டில் ஏற்பட்ட பெரிய அரசியல் மாற்றம். உங்கள் மன, உடல் நிலைகளில் ஏற்பட்ட பாதிப்பு (இது தடுப்பு முகாமில் அடைபட்டு இருப்பதால் வந்ததாகக் கூட இருக்கலாம்) அல்லது உங்களது சட்டத் தரணி உங்களுடைய வழக்கை கவனயீனமா கையாண்டிருக்கலாம்.

5. புதிய தகவல்களினால் நீங்கள் Fresh Claim போட்டிருந்தால் அல்லது அதுவும் நிராகரிக்கப்படும் நிலையில், நீங்கள் Judicial reviewக்கு விண்ணப்பித்திருந்தால்

6. உங்கள் வழக்கு எல்லா அப்பீலையும் பிரித்தானிய வழக்கு மன்றத்தில் தோற்றபின் European Court of Human Rightsக்கு போட்டிருக்கும் வேளையில் அவர்களிடம் இருந்து " a stay of Removal" பெற்று வைத்திருக்கலாம்.

7. உங்களை தரக்குறைவாக நடாத்தியதற்காக நீங்கள் நட்டஈடு கோரி இருக்கும் வேளையில் ( இதில் பலாத்காரமாக உங்களை திருப்பி அனுப்ப விளையும்போது நீங்கள் பலமான தாக்குதலுக்கு உள்ளாகுவதுவும் அடங்கும்)

8. உங்கள் தாய்நாடு நீங்கள் அந்த நாட்டை சேர்ந்தவர் இல்லை என்று உங்களை திருப்பி ஏற்க மறுக்கும் நிலையில்

9. நீங்கள் நிறைமாத கர்பணியாக இருக்கும் பட்சத்தில்

10. நீங்கள் இந்த நாட்டில் பலகாலமாக இருக்கும் பட்சத்தில் '"Respect for family and private life" என்ற உரிமையின் கீழ்

இதைத்தவிர சரியான முறையில் திருப்பி அனுப்புவதற்குரிய சட்டதிட்டங்களை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை எனில், உங்களை திருப்பி அனுப்பப்பட முடியாது. உதாரணமாக திருப்பி அனுப்புவதற்காக தகவல்கள் திகதி, நேரம், விமானத்தின் விபரம் எல்லாம் உங்களுக்கு தரப்பட்டிருக்க வேண்டும்.

தடுப்புமுகாமில் இருப்பவர்களுக்கு உள்ள வெளி உலகத்தொடர்பு மிகவும் குறைந்தளவாகவே உள்ளது. அதுவும் பெருமளவாக தடுப்பு முகாம்களில் அவர்கள் குற்றவாளிகள் போலவே நடாத்தப்படுகின்றார்கள். அவர்களின் தேவைகள் மனிதாபிமான முறையில் அணுகப்பட்டு தீர்த்துவைக்கப்படுவதில்லை என்றும் அதனால் அங்குள்ளவர்கள் மேலும் சிரமங்களுக்கு ஆளாகிறார்கள் என்று Crossroadswomen என்ற நிறுவனத்தின் ஆய்வு குறிப்பிடுகிறது.

**இன்று வரை இலங்கைக்கு தமிழர்கள் அவ்வப்போது திருப்பி அனுப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எல்லா நேரங்களிலும் அது பெரிய செய்தியாக்கப்படுவதிலலை.**

தமிழருக்கான அகதிகள் நிறுவனங்கள் நிதித் தட்டுப்பாடு காரணமாக அவர்களின் சேவைகளை பெருமளவு குறைந்து மிகக்குறைவான மக்களுக்கே உதவிவழங்கி வரும் இந்நிலையில், நாம், தமிழர் நலன் விருப்பிகள், ஊடகங்கள் மூலம் இத்தடுப்பு முகாமில் எம்மவர்கள் படும் துன்பங்களை வெளிக்கொணர்வதோடு, அவர்கள் திருப்பியனுப்படுவதை தடுப்பதற்கும் எங்களால் முடித்த பங்களிப்பை செய்ய முன்வரவேண்டும்.

Useful addresses

Association of Visitors to immigration detainees (AVID) 0207 281 0533

www.aviddetention.org.uk

Medical Foundation for the care of Victims of Torture ( Tel: 020 7697 7777 Fax: 020 7697 7799

Bail for immigration detainees

London 020 7247 3590 Fax 020 7247 3550

MGS MASS GLOBAL SHIPPING
MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
* Packers * Movers * Shippers
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
We Offer the Best Services than all the Other in the trade!
உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.







Special rates for Containers and Machinery
4 Collection Points :
Harrow
Watford
Knightsbridege
Croydon
T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30
FREIGHT ONLY £15.00 FREIGHT AND BOX £15.00 (Volume 4.5Cu.ft)
Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £10.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions

MNP ACCOUNTANTS



✔ Free Initial Consultation
✔ Annual Accounts
✔ Management Accounts
✔ VAT Return & Book Keeping
✔ Wages & Salary
✔ Business Planning
✔ Profit forecasting
✔ Self Assessment
✔ Tax Planning & other Taxation
✔ VAT & Tax Invesigation
✔ Tax Credits
✔ Company Formation
✔ Business Advice
✔ Web Design and Development
"It is not what you earn it is what you keep. To keep more of what you earn call us"
468, Church Lane, Kingsbury, London, NW9 8UA
Tel: 020 8200 2405, 020 8200 9332
07956274856 Fax: 020 8200 2406
Branch: No.06, 32nd Lane, Wellawatta, Colombo - 06
T: +94 112 363 400
www.mnpaccountants.co.uk | info@mnpaccountants.co.uk

ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!
SUBSCRIPTION FORM
Name:
Address :
Postcode:
Telephone:
மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும்,
G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## "சமாதானத்திற்கான இணையாள் இல்லை"

# "இஸ்ரேலும் - பாலஸ்தீனமும்"





**நடராஜா முரளிதரன்**

*(ஒரு பேப்பருக்காக)*

இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படும் வேளையில் இஸ்ரேலிய தேர்தல் முடிவுகள் அனைத்தையும் முழு உலகமும் அறிந்திருக்கும். பிரதமர் 'நத்தனியாகு' மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார். ஆனால் இந்தத் தேர்தலில் நிகழ்ந்து கொண்டிருக்கும் போட்டி என்பது வலதுசாரிக் கட்சிகளுக்கு இடையிலானது என்பதே இங்கு ஆழ்ந்து பார்க்க வேண்டிய விடயமாகிறது.

இஸ்ரேலின் அரசியல் வரைபடத்தை எடுத்துக் கொண்டால் அதற்கென வழக்கமான தொடர்ச்சியான வரைமுறை என்று ஒன்று கிடையாது. அடிப்படையில் முற்போக்கு சக்திகள் விரும்புகின்ற பகுதி விடுபட்ட பகுதியாகவும் மிக முக்கிய பகுதியாகவும் உள்ளது என்றே கூற வேண்டும். இங்கு முழுமையான இடதுசாரிகளும், முற்போக்கு சார் இடதுசாரிகளும் எண்ணிக்கையில் மிகவும் சிறியதாகவே இருக்கிறார்கள். இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக இஸ்ரேலிய அரசியல் கட்டமைப்பு உருவாக்கத்தையும் கொள்ள வேண்டும்.

இஸ்ரேல் என்ற நாட்டின் மக்கள் தொகை பன்னிரண்டு மில்லியன்கள். ஆனால் இந்த பன்னிரண்டு மில்லியன் மக்கள் தொகையில், ஏழு மில்லியன் மக்களே இஸ்ரேலிய குடியுரிமையைக் கொண்டவர்கள் ஆவர். மற்றையோர் குடியுரிமை கொண்ட மக்கள் அல்ல! அவர்கள் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளான மேற்குக்கரை, காசா போன்ற பிரதேசங்களில் வாழும் பாலஸ்தீனியர்கள்.

இந்த ஏழு மில்லியன் இஸ்ரேலிய குடிமக்கள் மத்தியில், ஏறக்குறைய ஒன்றரை மில்லியன் இஸ்ரேலிய குடியுரிமை கொண்ட பாலஸ்தீனியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரேலியர்களுக்கு மத்தியில் வாழுபவர்கள். முக்கியமாக ஜெருசலத்தில் பெரும்பகுதியினர் உள்ளனர். ஆனால் தற்போதெல்லாம் அந்த பாலஸ்தீனியர்களில் பெரும்பான்மையோர் இஸ்ரேலியத் தேர்தலை முற்றிலும் வெறுத்த நிலையில் பார்க்கின்றார்கள். வாக்களிக்கத் தகுதி படைத்த பாலஸ்தீனியர்களில் அரைவாசிப் பகுதியினர் மட்டுமே இந்தத் தேர்தல்களின்போது வாக்களிக்கின்றார்கள்.

எனவே அடிப்படையில் "இஸ்ரேல்" என்ற யூத அரசு நிறுவனத்தை பலமாகக் கட்டிக் காப்பாற்ற முனையும் 'சியோனிஸ்ட்டுக்களுக்கே' அங்கு ஆளுவதற்கான உரிமை விதிக்கப்பட்டிருக்கின்றது. ஏனெனில் 'இஸ்ரேல்' என்ற நாடு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே அங்கு யூத இனப் பெரும்பான்மைதான் நிலை நிறுத்தப்பட்டு வந்துள்ளது. ஆனால், அவ்வாறான யூத தனித்துவத்தையும், மாண்பையும் கடைப்பிடிக்கும் சியோனிச இயக்கத்தின் உள்ளும் பல்வேறுவகைப் பார்வைகள் உள்ளன. பல்வேறு கட்சிகள் இயங்கும் ஜனநாயக 'யூத அரசு' என்பது யூத தனித்துவம், இஸ்ரேல் யூதர்களுக்கே உரித்தான தனித்த நாடு என்ற கருத்தை ஊக்குவிக்கப் பயன்படுத்தப்படுகின்ற சிறந்த வழியாகும் 'சியோனிச நிகழ்ச்சி நிரல்' என்று அதனைச் சாடுகின்ற அரசியல் அவதானிகளது கருத்துகளையும் நாம் அவதானிக்க வேண்டியுள்ளது.

'இஸ்ரேல்' என்ற நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் உள்ளடக்கத்தில் ஒன்றாயிருப்பதாக அவ் அவதானிகள் சுட்டுகிறார்கள். அது என்னவெனில் இஸ்ரேலில் வாழும் மக்களில் 'யூதர்கள்' என்ற இனம் மட்டுமே கூடுதல் உரிமைகளைப் பெறுகின்றார்கள். மற்றும் 'யூத' இனத்தை சாராத அனைவரையும் நிறுவப்பட்ட 'யூத அரசு' இரண்டாந்தரக் குடிமக்களாக என்று சொல்லி அதிகாரத்தைச் செலுத்துகிறது. இதனை எந்தவொரு மறுப்பும் இல்லாது ஏற்றுக்கொண்ட கட்சிகளாகவே அனைத்துக் கட்சிகளும் திகழ்கிறது. நான் இங்கு தீவிர இடதுசாரிக் கட்சிகளை இதற்குள் கொள்ளவில்லை.

நாம் வேறொரு நாட்டில் இவ்வாறு வாதம் புரியும், சித்தாந்தம் பேசும் கட்சிகளை எவ்வாறு அளவிடுகின்றோம் ? 'ஒரு தேசமானது ஒரு இனத்துக்கு, ஒரு தேசியத்துக்கு , ஒரு மதத்துக்கு, ஒரு இனக் குழுவுக்கு மட்டும்தான் சொந்தமானது' என்று சொன்னால் நாகரீக உலகில் என்ன நிகழும் ? எனவே இத்தகைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு முழுமையான அர்த்த பரிமாணத்தில் ஒன்றுபட்டுச் செயற்படும் கட்சிகளை 'தீவிர வலதுசாரித்துவம்' கொண்ட இனவாதக் கட்சிகளாகவே நாம் நோக்கலாம்.

இஸ்ரேலிய அரசியல் அரங்கில் இன்னுமொரு விடயத்தையும் பார்க்கலாம். அவை 'பொருளாதாரக் கேள்விகள்' மற்றும் 'சமூகக் கேள்விகள்' என்பதாகும். அடுத்தது 'தேசியப் பிரச்சினை' அல்லது 'பாதுகாப்புக் கேள்விகள்' பற்றியதாகும். இங்கு தீவிர வலதுசாரி, இனவெறிக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு சமூக நலன், குறைந்தபட்ச ஊதியம் மற்றும் வேலையில்லாப் பிரச்சினை போன்ற விடயங்களில் பாராளுமன்றத்தில் உள்ள பாலஸ்தீன உறுப்பினர்களின் ஒத்துழைப்புத் தேவைப்படுகின்றது. இதில்தான் புதுமையான வேறுபாடுகளை காணலாம். அது தான் பாலஸ்தீன மாநில பிரச்சினை, யூதர்கள் அல்லாத மக்களின் சம உரிமைகள், என்று வரும்போது, மிகவும் தீவிரமாக எதிர்பக்க நிலையெடுத்துச் செயற்படுவார்கள்.

'இஸ்ரேல்' என்ற நாட்டை மேற்கு ஐரோப்பிய ஜனநாயகத்தோடு ஒப்பிடும் பொழுது, மென்மையான ஒரு சமூக ஜனநாயகமாக, மென்மை பொருந்திய நலன்புரி அரசு என்று இஸ்ரேலிய வார்த்தைகளில் சொல்லிவிடலாம். ஆனால் சிந்திப்பதற்கு நிறைய உள்ளது. அது என்னவெனில் 'இஸ்ரேல்' தன்னை யூத நிலமாகவும், யூத மக்களை மட்டுமே நேசிக்கின்ற ஒரு 'யூத அரசாகவும்' , அதன் மக்கள் தொகைப் பெரும்பான்மையை யூதத்தாலேயே கட்டியாள நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனை உறுதிசெய்யத் தந்திரமான வழியை 'யூத தேசம்' தேர்ந்தெடுக்கின்றது. பாலஸ்தீன மக்களைக் கட்டுப்படுத்த மிக நுட்பமான முறையில் அது செயற்படுகிறது. உலகத்துக்குத் தன்னை மேம்பட்ட ஜனநாயகவாதியாகக் காட்டியபடி தனது ஆக்கிரமிப்பைத் தொடர்கிறது. ஆனால் இஸ்ரேல் என்ற நாடு ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்ட விரும்புவதாகத் தோற்றம் தந்து, பாலஸ்தீனியர்களுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர விரும்புவதாகவே அரசியல் அரங்கில் காட்சிகளை நகர்த்திய வண்ணம் இருப்பதையும் நாம் அவதானிக்கலாம்.

இத்தகைய கொள்கைகளை முன்னெடுப்பதில் இஸ்ரேலில் 'தொழிற் கட்சி' முக்கிய பங்காற்றி வந்திருக்கின்றது. 'ஹ்ட்சாக் ராபின்' மற்றும் 'எகுட் பாரக்' போன்ற முன்னாள் இஸ்ரேலிய பிரதம மந்திரிகள் இவற்றைத் திறம்படச் செய்ததாகச் சில அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

'எகுட் பாரக்' இத்தகைய நாடகத்தைத் தீவிரமாக அரங்கேற்றம் செய்கிறார். நடைமுறைக்கேற்ற 'சியோனிஸம்' என்று யூத சித்தாந்தத்துக்கு புதிய வடிவம் கொடுக்கிறார். இரண்டாவது 'இன்டிபாடா' கிளர்ச்சி இயக்கம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் நெருக்கடியைக் கொண்டு வந்த பொழுது அவர் கையாண்ட அணுகுமுறை இது!

'போலிப்' பேச்சுவார்த்தைகள், 'போலிச்' சமாதான முயற்சிகளை முன்னாலே வைத்துக் கொண்டு பின்னாலே தங்களது நிஜக் காரியங்களை ஆற்றுகிறார்கள். 'பராக்' சொன்னார்! "நான் பாலஸ்தீனியர்களுக்கு மிகச் சிறந்த தீர்வொன்றை வழங்கப் போகின்றேன் அவர்களால் தங்களுக்குக் கிடைக்கவுள்ள இச் சிறப்பான வாய்ப்பை மறுக்க முடியாது! அத்தகைய வாய்ப்பை உருவாக்கப் போகிறேன்", என்றார். அவர் பேச்சுவார்த்தைகளில் அந்த வாய்ப்பை அடிப்படையாக வைத்து "இந்தத் தீர்வை எடுத்துக் கொள்ளுங்கள்" அல்லது "இதை விட்டு விலகுங்கள்" என்று கூறினார். "இந்த வாய்ப்பைப் பற்றி எந்தப் பேச்சுவார்த்தைகளும் இருக்கப் போவதில்லை நீங்கள் இதை ஏற்க வேண்டும்" என்று மேலும் உரைத்தார்.

## நடைமுறையில் இஸ்ரேலிய அரசியலில் இடது, வலது, மத்தி என்ற சகல சித்தாந்தத்தை உள்ளடக்கியவர்களாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் காலனித்துவமே நடைமுறைப்படுத்தப்பட்டது பாலஸ்தீனர்களை நோக்கி!

இந்த வாய்ப்பு உண்மையில் பாலஸ்தீனியர்களுக்கு இறையாண்மையைக் கொடுக்கவில்லை. இது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களான 'மேற்குக்கரை', 'காசா' போன்றவற்றில் மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியை வழங்குவதாக மொழிந்தது. ஆனால் அதனைச் சூழ்ந்து எல்லா பக்கங்களிலும் புவியியல் ரீதியாக இஸ்ரேல் இருக்கின்றது. தன்னால் சூழப்பட்ட நிலத்தை பாலஸ்தீனியர்களுக்கு இராணுவமற்ற சூனியப் பிதேசமாகக் கொடுக்கிறது. ஆனால் சுற்றி வளைத்து ஆயுதங்களுடன் முற்றுகைக்கு உள்ளாக்குகிறது!

பாலஸ்தீனியர்களால் அன்று அந்தத் திட்டம் நிராகரிக்கப்பட்டது. அந்த வேளையில் பாலஸ்தீன அதிகார சபையின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர் 'யசீர் அராபத்'. 'அரபாத்' கூட ஒருவேளை எந்த ஒரு இஸ்ரேலியப் பிரதமரும் 'பராக்' போன்று இவ்வாறான வாய்ப்பு ஒன்றினைத் தரப் போவதில்லை என்று நினைத்திருக்கக் கூடும். ஆனால் 'பராக்' இவ்வாறு கூறினார் ! ``There is no partner for peace" என்று!

பாலஸ்தீனர்களின் இந்தத் தீர்வு நிராகரிப்புக்குப் பின் 'சமாதானத்திற்கான இணையாள் இல்லை' என்ற வாசகம் இஸ்ரேலிய அரசியலில் மிகப் பிரசித்தமான சொல்லாடலாக இஸ்ரேலின் சகல அரசியல் தரப்புக்களாலும் பயன்படுத்தப்பட ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் நடைமுறையில் இஸ்ரேலிய அரசியலில் இடது,வலது, மத்தி என்ற சகல சித்தாந்தத்தை உள்ளடக்கியவர்களாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் காலனித்துவமே நடைமுறைப்படுத்தப்பட்டது பாலஸ்தீனர்களை நோக்கி!

*(இன்னும் வரும்)*

Come Directly to a...

**TAMIL SPEAKING BARRISTER**

*For expert legal advice & representation in Criminal and Immigration law*

**Criminal Litigation**

- Money Laundering
- Serious Fraud
- VAT / Tax investigations
- Confiscation & proceeds of crime
- Appeals against conviction and sentence.
- Regulatory / Health & Safety Investigations

**Immigration**

- Nationality
- Asylum
- EU Law
- Visas

(Tiers1-5, Resident Permits, Indefinite Leave to remain)

- Judicial review

அனைத்து சட்ட ஆலோசனைகளுக்கும்...

**Services Includes:**

Flexible consultancy times & police station representation can be arranged(24 hours).

சகல விதமான குடிவரவு ஆலோசனைகளையும் நிபுணத்துவத்துடன் செய்து தர அழையுங்கள்....

**For Appointments**

Contact: **07837 450397**

Email: **mganesan@furnivallaw.co.uk**

**www.confiscationbarrister.com**

**Chambers:**

Furnival Chambers, 32 Furnival Street, London, EC4A 1JQ.



**Muthupandi Ganesan**

**முத்துப்பாண்டி கணேசன்**

LL.B(Hons)(Wales),LL.M(Criminal Litigation)

**Barrister-at-Law [Direct Access]**

# மாலியும், தந்திரோபாயம் மாற்றிய அல் கெய்தாவும்



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

மாலி மேற்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடு. ஆபிரிக்கா கண்டத்தில் ஏழாவது பெரிய நாடு. அங்குள்ள வறிய நாடுகளில் ஒன்று. தனக்கென்று ஒரு தனித்துவ கலாச்சார, பாரம்பரிய, சரித்திரம் கொண்ட நாடு. ஆபிரிக்காவில் மாலியின் இசை மிகச்சிறந்த இசை எனக் கூறப்படுகிறது. இந்த மாலியில் நடக்கும் போர் உலகத்தின் கவனத்தை இப்போது ஈர்த்துள்ளது. மாலியில் இருக்கும் கனிம வளங்கள் சரியாக பயன்படுத்தப்படவில்லை.

### ◆ கனிம வளம் நிறை மாலி

மாலியில் bauxite, iron ore, base metals and phosphate ஆகிய கனிம வளங்கள் இருக்கின்றன. 1.3மில்லியன் தொன் இரும்புக் கனிமம் மாலியில் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவைமட்டுமல்ல மாலியில் தங்கமும் வைரமும் இருக்கின்றன. இல்மனைற்றும் நிறைய இருக்கலாம் என நம்பப்படுகிறது.

### ◆ அடிமட்டத்தால் வரைந்த அடி மட்ட எல்லைகள்

19-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து ஐரோப்பிய நாடுகள் ஒன்றிற்கு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு உலகின் பல பாகங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றன. ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் பல பிரதேசங்கள் ஐரோப்பிய நாடுகளின் கட்டுப்பாட்டுகளுக்குக் கீழ் வந்தன. தாம் கைப்பற்றிய நாடுகளின் எல்லைகளை அங்கு வாழும் மக்களின் இன அடையாளங்களைக் கருத்தில் கொள்ளாமல் வகுத்துக் கொண்டன. பூகோள வரைபடங்களை வைத்து அடி மட்டங்களால் நேர் கோடுகளை வரைந்து தம் வசதிக்கு ஏற்ப ஆபிரிக்கக் கண்டத்தின் நாடுகளின் எல்லைகள் ஆக்கிரமிப்பாளர்களின் வசதிக்கேற்ப வரையப்பட்டன. ஒன்றுடன் ஒன்று ஒத்து வாழ முடியாத இனக்குழுமங்கள் ஒரு நாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. ஈராக், லிபியா, சிரியா, மாலி போன்ற நாடுகள் இன்று எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு குடியேற்ற (காலனித்துவ) ஆட்சியாளர்களின் எல்லை வகுப்பு முக்கிய காரணம்.

### ◆ மாலி காலியான கதை

11-ம் நூற்றாண்டில் இருந்து 13-ம் நூற்றாண்டு வரை மாலியின் பொற்காலம். மாலியர்கள் பெரு நிலப்பரப்பை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அதன் பின்னர் பல அயல் நாடுகள் மாலியைக் கைப்பற்றி ஆண்டனர். 1898இல் பிரான்ஸ் மாலியை ஆக்கிரமித்து தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. பிரான்ஸ் சூடான் என்னும் பெயர் மாலிக்குச் சூட்டப்பட்டது. இரண்டாம் உலகப் போரில் அடிபட்டுக் களைத்த ஐரோப்பிய நாடுகள் 1947இன் பின்னர் தமது குடியேற்ற ஆட்சி நாடுகளை ஒன்றன் பின் ஒன்றாக இழக்கத் தொடங்கின. 1960இல் மாலி பிரான்ஸிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. மொடிபோ கீற்றாவின் தலைமையில் ஒரு ஒற்றைக் கட்சி சோசலிச அரசாக உருவெடுத்தது. 1968இல் ஒரு படைத்துறைப் புரட்சி மூலம் மூசா ட்ராரே ஆட்சியை கீற்றாவிடம் இருந்து கைப்பற்றினார். 1979இல் புது அரசியலமைப்பு, புது தேர்தல், புது ஆட்சி எனக் கலக்கினார் மூசா ட்ராரே. 1991இல் மீண்டும் புரட்சி மூசா விரட்டப்பட்டார். 1992இல் பல கட்சித் தேர்தலின் கீழ் அல்ஃபா கோனாரே ஆட்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1995இல் 1999இல் உள்நாட்டு இனக்கலவரம் அரபு இனத்தவருக்கும் குன்ரா இனத்தவருக்கும் இடையில் நடைபெற்றது. 2002இல் தேர்தல் மூலம் அமடு தூமானி பதவிக்கு வந்தார். தேர்தலில் முறை கேடுகள் நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. 2006இல் பிரிவினை கோரும் வட பிராந்தியம் வாழ் துவாரெக்(Tuareg) இனக் குழுமத்தினருடன் அல்ஜீரிய அனுசரணையுடன் சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்டது. மீண்டும் கிளர்ந்தெழுந்த துவாரெக் இனத்தவர் 2009இல் அடக்கப்பட்டனர். 2012 மார்ச் மாதம் மூசா ட்ராரே படைத்துறையினரின் புரட்சியால் அகற்றப்பட்டார். 2012இல் மாலியின் வட பிராந்தியத்தில் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த துவாரெக் இனத்தவர்கள் சுதந்திரப் பிரகடனம் செய்தனர். 2012 ஜூனில் துவாரெக் இனத்தின் அன்சார் டைன் (மதப் பாதுகாவலர்) இயக்கத்தினர் வட மாலியில் இஸ்லாமிய அரசை உருவாக்கி இஸ்லாமியச் சட்டங்களை நடைமுறைப்படுத்தினர். 2012 நடுப்பகுதியில் அன்சர் டைன் இயக்கமும் அல் கெய்தா இயக்கமும் இணைந்து திம்புக்து நகரைக் கைப்பற்றினர். பின்னர் 2012இன் இறுதியில் மேலும் முன்னேறி மாலியின் மத்திய பிராந்திய நகரங்களையும் கைப்பற்றினர். மாலிய மக்கள் தொகையில் 10% மட்டும் கொண்ட துவாரெக் இனத்தவரின் இந்த வெற்றி பாராட்டப்பட வேண்டிய ஒன்றே.

### ◆ மாலியில் அல் கெய்தாவின் சோலி

அல் கெய்தா இயக்கம் மேற்கு நாடுகளை எதிர்ப்பதை மட்டும் கருத்தில் கொண்டு செயற்பட்டது. இஸ்லாமியர் பல கொடுங்கோலர்களின் ஆட்சியின் கீழ் பொருளாதார முன்னேற்றம் இன்றி அவதிப்படுவதைக் கருத்தில் கொள்ளவில்லை. விளைவு அரபு வசந்தம் மக்களின் இயல்பான புரட்சியானது. துனிசியா, லிபியா, எகிப்த்து ஆகிய நாடுகளில் அல் கெய்தாவைப் புறந்தள்ளி விட்டு மக்கள் ஆட்சியாளர்களை விரட்டினர். இதில் லிபியப் புரட்சியாளர்களுக்கு ஐக்கிய அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பியாவும் பேருதவி செய்தன. இதைத் தொடர்ந்து அல் கெய்தா தனது தந்திரோபாயத்தை மாற்றி கொண்டது. இயல்பாக எழும் மக்கள் எழுச்சியுடன் தானும் இணைந்தது. சிரியாவில் நடக்கும் போரில் அல் கெய்தா போராளிகள் பங்கு வகிக்கின்றனர். கொன்னா நகரைக் கைப்பறி தென் பிராந்தியத்தை நோக்கி அன்சார் இயக்கமும் அல் கெய்தா இயக்கமும் முன்னேறத் தொடங்க அல் கெய்தா மாலியில் துவாரெக் இனக்குழுமத்துடன் இணைந்து தனக்கு என ஒரு நாட்டை உருவாக்கி விடும் என்ற அச்சம் மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் ஐக்கிய அமெரிக்காவையும் ஆட் கொண்டது. விளைவு பிரெஞ்சுப் படையினர் மாலியில் களமிறங்கினர். மாலியின் அயல் நாடுகளான சாட்டும் அல்ஜீரியாவும் பிரான்ஸின் நட்பு நாடுகள். அது பிரான்ஸிற்கு சாதகமாக இருக்கிறது. மாலியின் அதிபர் ட்ராரே வேண்டு கோளிற்கிணங்க தனது படைகளை அனுப்பியதாக பிரெஞ்சு அதிபர் கூறுகிறார். மாலியில் இயங்கும் அல் கெய்தா யட al Qaeda in the Islamic Maghreb (AQIM) vd என்னும் பெயருடன் செயற்படுகிறது.

### ◆ பிரான்ஸின் ஒரு தலைப்பட்ச முடிவு

அன்சார் இயக்கமும் அல் கெய்தா இயக்கமும் பெருங்கதியில் அடையும் வெற்றி பிரான்ஸை தனது நேட்டோ நண்பர்களுடன் கலந்து ஆலோசிக்காமல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை செல்லாமல் மாலி அதிபரின் வேண்டுகோளை மட்டும் கருத்தில் கொண்டு ஒருதலைப்பட்சமாக துரித முடிவெடுத்து Operation Serval என்னும் குறியீட்டுப் பெயருடன் படைநகர்த்த வைத்தது. கொன்னா நகரைத் தொடர்ந்து தென் பிராந்திய மொப்டி நகரும் கைப்பற்றப்படலாம் என்ற அச்சமிருக்கையில் பிரான்ஸ் தலையிட்டது. மாலி வேண்டுகோள் விடுத்த மறுநாளே பிரெஞ்சுப் படையினர் களமிறங்கினர். பிரான்ஸின் நேட்டோ நண்பர்கள் மாலிக்குப் படை அனுப்புவதற்கு தயக்கம் காட்டியுள்ளனர்.

### ◆ பிரான்ஸின் வியட்நாம்

மாலியின் வட பிராந்தியம் மட்டும் ஆப்கானிஸ்த்தான் அளவு நிலப்பரப்புக் கொண்டது. இந்தப் பெரும் பாலைவன நிலப்பரப்பு துவாரெக்கினருக்கு அத்துபடி. ஆனால் பிரெஞ்சுப் படையினருக்கு உகந்த நிலப்பரப்பல்ல. உகந்த கால நிலையுமல்ல. அல் கெய்தா இப்போது பிரன்ஸிலும் பார்க்க பெரிய நிலப்பரப்பை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. அங்கு அல் கெய்தா ஆழக் காலூன்றினால் அது மத்தியகிழக்கிற்கு மட்டுமல்ல ஆபிரிக்காவிற்கு மட்டுமல்ல ஐரோப்பாவிற்கே ஆபத்து என பல மேற்கு நாடுகள் கருதுகின்றன. தனது தெற்குக் கோடியில் ஒரு அல் கெய்தா அரசு அமைவதை பிரான்ஸ் விரும்பவே மாட்டாது. ஆனால் மேற்கு ஆபிரிக்காவின் பல நாடுகளில் பிரெஞ்சுப்படையினர் பல தடவை போர் செய்துள்ளனர். பிரான்ஸிற்கு பிரித்தானியா உட்படப் பல நாடுகள் உதவுகின்றன. அமெரிக்கா மாலியில் தலையிடுவதற்கு சட்ட ரீதியான பிரச்சனை உண்டு. அமெரிக்கா ஐ.நா. பாதுகாப்புச் சபையூடாக தலையிடும்படி பிரான்ஸைக் கேட்டிருந்தது. போர் தொடங்கும் முன்னரே பிரான்ஸ் தனது நட்பு நாடுகள் தனக்கு நிதி உதவி செய்ய வேண்டும் என்று கையேந்தியுள்ளது. மற்ற ஆபிரிக்க நாடுகளின் படைகள் தனக்கு உதவிக்கு வரும் என பிரான்ஸ் காத்திருக்கிறது. பிரான்ஸால் மாலியின் தெற்குப் பகுதிகள் கைப்பற்றப் படுவதை தடுக்க முடியும். வட பிராந்தியத்தை மீட்க பல மாதங்கள் எடுக்கலாம். பிரெஞ்சு விமானத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் துவாரெக்கினர் ஒரு சிறு நகரைக் கைப்பற்றி பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர்.

### ◆ பிரான்ஸிற்கு அல் கெய்தாவின் எச்சரிக்கை

தம்மீது தாக்குதல் நடாத்தியதன் மூலம் பிரான்ஸ் நரகத்திற்கான வாசலைத் திறந்துள்ளது என எச்சரித்த அல் கெய்தா பிரன்ஸின் இருதயப்பகுதிகளைக் தாக்குவோம் எனச் சூளுரைத்துள்ளது. அல்ஜீரியாவில் பிரான்ஸ் உட்பட பல மேற்கு ஐரோப்பியரும் வட அமெரிக்கர்களும் அல் கெய்தாவினால் சிறை பிடிக்கப் பட்டுள்ளனர்.

### ◆ பிரான்ஸ் அவசரப்பட்டுவிட்டதா?

2012இன் ஆரம்பப்பகுதியிலேயே மாலியில் இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்கள் கை ஓங்கப் போகிறது என்று தெரிந்தவுடன் அமெரிக்கா பல ஆபிர்க்க நாட்டுப் படைகளுக்குச் சிறப்புப் பயிற்ச்சி அளிக்கத் தொடங்கிவிட்டது. அவர்கள் இன்னும் தாக்குதலுக்கு தயார் இல்லை. இன்னும் சிலமாதங்களில் அவர்களை அமெரிக்கா மாலிக்கு அனுப்பத் திட்டமிட்டிருந்தது. மேற்கத்தியப் படைகள் நேரடியாகத் தலையிட்டால் நிலைமை அமெரிக்காவிற்கு எதிரான இசுலாமியரின் போர் எனத் திரிக்கப்பட்டுவிடும் என்று அமெரிக்கா புதிய உத்தியை வகுத்திருந்தது. ஆனால் தனது உத்தியை பிரான்ஸ் அவசரப் பட்டு குழப்பிவிட்டதாக அமெரிக்க நிர்வாகம் கருதுகிறது.

*(தொடர்ச்சி 26ம் பக்கம்)*

**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

**உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்**



BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping



# "Only a Complete Restructuring of the Sri Lankan State will Bring Real Peace"

- Ravi Kumar

*We published an interview with Suren Surendiran of Global Tamil Forum in the last issue. After this interview, we spoke to Ravi Kumar, a senior leader attached to British Tamils Forum, and asked him to clarify the prevailing issues between these two organisations. Following are the excerpts of a telephone interview with Ravi.*

**ORU PAPER :** Your recent conference which was held in the British parliamentary complex was attended by some leading figures in the Tamil Polity, both in our homeland and abroad. However, there were mixed reactions about the conference from the diaspora. Are you satisfied with the outcome of the conference and the progress on the follow ups?

**RAVI:** It has been organised on a timely manner as part of our strategic initiative. We want to be proactive on pushing the struggle forward rather than reactive. Since May 2009 BTF's human rights team in partnership with other country organisations has made significant inroads globally and in UNHRC Geneva. We understand that there will be a review process in the 22nd session of UNHRC which will give us an opportunity to expose further the Genocidal Sri Lankan state. We want to win friends for our struggle all around the world and elevate our just cause into the important global institutions. We have special relationship with Tamils in Tamil Nadu and other countries. A united call by the global Tamils through various responsible organisations representing 75 million Tamils would help to refocus our call for Justice.

2) Pay and conditions of service will be discussed and agreed soon after either a telephone interview or face to face interview depending on the location of the applicant.

3) Applications close on 15 February 2013.

Please send your application with supporting documents by post to the London Sivan Kovil Trust's address given above for the attention of the Secretary of the Trust, alternatively applicant can send the application and supporting documents to the temple email address - **sivan.kovil@yahoo.co.uk**

LONDON SIVAN KOVIL TRUST



# London Sivan Kovil Trust

Charity Registration No. 1051516
4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES.
Telephone: 00 44 208 318 844 Fax: 00 44 208 318 2108

## Vacancy for a position of Assistant Priest

### Job Descriptions:

Assistant priest will assist the Priests in their pastoral duties; in particular he will make flower garlands, prepare abisheka Thiraviyam for anointing the deities, decorate them with garlands and flowers, prepare Panchamirtham, a mixture of fruits honey and other ingredients, cook Amuthu, sacred sweet rice, Mothakam, Vadai, etc, for the Deities and then for distribution among the devotees. Assistant priest will be assigned responsibility for one or more aspects of the Annual Festival and other important religious ceremonies. Assistant priest will be reporting the senior priest/chief priest/secretary of the Trust.

**1) Applicant should meet the following requirements:**

a) Applicants must have been conferred kurukkalship in terms of Vedaagamas
b) Reasonable spoken knowledge of Tamil
c) Must be able to weave garlands of all types
d) A fair knowledge of Astrology will be considered an added advantage.
e) Relevant experience in conducting such religious services at Hindu Temples

*Perquisites:*

(1) Board and Lodging will be provided at the Trust's premises.
(2) Annual Leave of twenty eight days which include 8dyas public holidays.
(3) One and a half days leave is available for a week.

2) Pay and conditions of service will be discussed and agreed soon after either a telephone interview or face to face interview depending on the location of the applicant.

**3. Applications close on** 15 February 2013**.**

Please send your application with supporting documents by post to the London Sivan Kovil Trust's address given above for the attention of the Secretary of the Trust, alternatively applicant can send the application and supporting documents to the temple email address -**sivan.kovil@yahoo.co.uk**

LONDON SIVAN KOVIL TRUST

# ஷரியாச் சட்டம் சரியா ?



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

மதங்கள் தாய்மார்களைப் போன்றவை. மற்றவர்களின் தாயிலும் பார்க்க நான் எனது தாயை அதிகம் நேசிப்பேன். ஆனால் மற்றவர்களின் தாய்க்கு எனது தாயிலும் பார்க்க அதிகமாக மதிப்புக் கொடுக்க வேண்டும்.

ஷரியாச் சட்டம் 1. குரான், 2. சன்னா, 3. கருத்தொன்றிப்பு (Ijma) 4. ஒப்புமை (Qiyas) ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டது எனச் சொல்லப்படுகிறது. இவற்றில் குரான் இறைதூதுவர் எனக்கருதப்படும் முகம்மது நபிகள் அவர்களால் எழுதப்பட்டது. சன்னா நபிகளின் வாழ்கை முறையிலிருந்தும் அவர் தனது சீடர்களுக்குச் சொன்னவற்றில் இருந்தும் எழுதப்பட்டது. கருத்தொன்றிப்பு (Ijma) குரானின் போதனைகளை அடிப்படையாக வைத்து மக்களின் ஒருமித்த கருத்தால் உருவாக்கப்பட்டது. ஒப்புமை (Qiyas) என்பது மேற்கூறிய மூன்றிற்குள்ளும் அடங்காத பிரச்சனைகள் எழும்போது தீர்ப்புக் கூறுபவர்கள் பிரச்சனைகளுக்கான சொன்ன தீர்ப்புக்களில் இருந்து பெறப்பட்டவையாகும்.

**ஐரோப்பிய நாடுகளில் இசுலாமிய மத வழிபாட்டுக்கு இசுலாமியர்களுக்கு உள்ள உரிமை சவுதி அரேபியாவில் மற்ற மதங்களைப்பின்பற்றுவோர்க்கு இல்லாமல் இருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதா?**

இலங்கைப் பெண் றிசானா நபீக் 17வயதாக இருக்கும் போது செய்ததாகக் கருதப்படும் குற்றத்திற்காக அவரது தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஷரியா சட்டம் தொடர்பாக பல வாதப் பிரதி வாதங்கள் எழுந்துள்ளன.

ஷரியா என்றால் நீரை நோக்கிய பயணம் என்று பொருள்படும் என்று சிலர் சொல்கின்றனர். இசுலாமிய மதப்படி ஷரியா ஒரு சட்டமல்ல அதைப் பெரிது படுத்தத் தேவையில்லை என்றும் உண்மையில் இசுலாமிய மதம் 1. ஷஹாதா, 2. தினசரித் தொழுகை, 3, தானம் செய்தல், 4. ரம்மழான் மாதத்தின் போது நோன்பிருத்தல், 5. மக்காவிற்கான பயணத்தை மேற்கொள்ளுதல் ஆகிய ஐந்து முக்கிய தூண்களை நம்புதல் வேண்டும் என்று சொல்வோரும் உண்டு,

சவுதி அரேபியாவில் றிசானா நபீக் விசாரித்த விதத்தில் அல்லது தண்டனை வழங்கியதில் குறை இருந்தால் அதைக் குறை சொல்லுங்கள் ஆனால் எமது புனித ஷரியாச் சட்டத்தைக் குறை கூறாதீர்கள் என்று சிலர் வாதாடுகின்றனர். சவுதி அரேபியா உட்படப் பல அரேபிய நாடுகளில் வெளிநாட்டவர்களுக்கான வேலை என்பது ஒரு உரிமம் வழங்கப்பட்ட அடிமை வியாபாரம் எனச் சிலர் வாதிடுகின்றனர். சவுதி அரேபியாவில் ஆசியர்களை எப்போதும் அடிமைகளை போல் நடத்துவார்கள் என்றும் அங்கு ஆசியர்களுக்கு வேறு விதமாகவும் ஐரோப்பியர்களுக்கு அல்லது அமெரிக்கர்களுக்கு வேறு விதமாகவும் ஷரியாச் சட்டங்கள் அமுல்படுத்தப் படுகின்றன எனக் குற்றம் சாட்டப்படுகிறது. மனிதர்களுக்குள் வேறுபாடு காட்டும் இவர்களுக்கு அல்லாவின் பெயரைச் சொல்லக் கூட அருகதை இல்லை என்று சாடுபவர்களும் உண்டு. மண்ணில் இருப்பவர்களிடம் நீ கருணை காட்டினால் விண்ணில் இருப்பவர் உன்மீது கருணைகாட்டுவார் என்று போதித்தவர் நபிகள். உண்மையான இசுலாமியன் நிற, இன, குல வேறுபாடு காட்டமாட்டான். ஆனால் பல அரபு நாடுகளில் அது இல்லை.

பல பெண்ணுரிமைவாதிகள் ஷரியாச் சட்டம் பிரபலமாக இருப்பதற்குக் காரணம் அது ஆண்மேலாதிக்கத்தை வலியுறுத்ததால் என்கின்றனர். ஆணாதிக்கத்தில் சுகம் காண்பவர்களே ஷரியா சட்டம் வேண்டும் என்று நினைக்கின்றனர் என்கின்றனர் அவர்கள்.

புனிதப் போரை வலியுறுத்துதல், இசுலாமிய மதத்தை மறுப்பவர்களைக் கொல்லுதல், இசுலாமிய மதத்தில் இருந்து மாறுபவர்களைக் கொல்லுதல், முறையற்ற உடலுறவு கொள்பவர்களைக் கொல்லுதல், தன்னினச் சேர்க்கையாளர்களைக் கொல்லுதல், பயணிகளிடம் கொள்ளை அடிப்பவர்களைக் கொல்லுதல், திருடர்களின் கைகளை வெட்டுதல், பாதிக்கப்பட்டவர் பாதிப்புச் செய்தவரைப் பழிவாங்குதல், அடங்க மறுக்கும் மனைவியைத் தாக்குதலை அனுமதித்தல், மது அருந்துபவர்களுக்கும் சூதாடுபவர்களுக்கும் கசையடி கொடுத்தல் போன்றவை கடுமையான சட்டங்கள் என்றும் அதில் மன்னிப்பு , திருந்திவாழச் சந்தர்பம் கொடுக்காமை போன்றவை கருணையற்றவை என்கின்றனர் சிலர். கடுமையான தண்டனைகள் தான் குற்றம் நடக்காமல் தடுக்கும் என்கின்றனர் ஷரியா சட்டத்தை ஆதரிப்போர்.

### ◆ விநோதமான மத போதனைகள்

புருவ ரோமங்களைப் புடுங்குதல் பாவம். வீட்டில் படங்களை வைத்திருத்தல் இசுலாத்திற்கு விரோதமானது. ஒரு மனைவி தன் முகத்தை மூடாமல் கணவனுடன் சென்றால் அவள் மனைவி அல்ல, அடிமையாகும். இசுலாமைப் பரப்புவதற்காக ஒரு இசுலாமியன் ஒரு இசுலாமியனல்லாதவனை ஏமாற்றலாம். கொட்டாவிவிடுபவர்கள் சாத்தான்கள். நாய்கள் யாவும் கொல்லப்படவேண்டும்.

ஐரோப்பிய நாடுகளில் இசுலாமிய மத வழிபாட்டுக்கு இசுலாமியர்களுக்கு உள்ள உரிமை சவுதி அரேபியாவில் மற்ற மதங்களைப் பின்பற்றுவோர்க்கு இல்லாமல் இருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதா? சிலுவையை வைத்திருந்தார் சிலையை வைத்திருந்தார் என்பதற்காக ஒருவரைக் கைது செய்து தண்டித்தல் மனிதத்தன்மையானதா?

**உலகத்தில் வாழும் எல்லோரையும் ஒரு மதத்தை மட்டும் நம்பும்படி இனி எதிர்பார்க்க முடியாது. எந்த ஒரு மதமும் மற்ற மதங்களுடன் எப்படி இணைந்து வாழலாம் என்பதை அறிந்து கொண்டே ஆக வேண்டும்.**

சில நாடுகளில் ஷரியாச் சட்டத்தைக் கன்னா பின்னா என்று நிறைவேற்றுகிறார்கள். இந்தோனேசியாவில் ஷரியா சட்டத்தை அமுல் படுத்துவதாகச் சொல்லிக் கொண்டு பெண்கள் மோட்டார் சைக்கிளில் கால்களை இருபுறமும் போட்டுக் கொண்டு போவது, இறுக்கமான உடை அணிவது தடை செய்துள்ளார்கள்.

உலகத்தில் வாழும் எல்லோரையும் ஒரு மதத்தை மட்டும் நம்பும்படி இனி எதிர்பார்க்க முடியாது. எந்த ஒரு மதமும் மற்ற மதங்களுடன் எப்படி இணைந்து வாழலாம் என்பதை அறிந்து கொண்டே ஆக வேண்டும். மற்ற மதங்களை எப்படி மதிக்க வேண்டும் என்பதை அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். 1400 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருக்கும் ஷரியாச் சட்டத்தை புதிய உலகத்திற்கு ஏற்ப மாற்றாமல் இருப்பது சரியா?

## அணையாத தீபம் கேணல் கிட்டு...

உயிரின் அடிநாதத்தில் எழுகிறது
உனக்கான கூக்குரல் –
குண்டு தொலைக்காத உன்
தைரியத்தை
ஒரு கப்பல் தகர்த்ததே சோகம்;

தோல்வி நெருங்கிடாத உன்
ராஜா பாட்டையில் –
ஒரு வெற்றி குறுக்கிட்டு
உயிர் தின்றதே வலிக்கும்
ரணமானது

எதிரியின் உறக்கத்திலும் –
உயிர் தைக்கும் மரணபயத்தை
உன் வீரிய புயலின் வளர்ச்சி
கொடுத்தும் – அதை
காலம் தின்று வரலாறு பேசுகிறதே –
வருத்தமில்லையர்

இரண்டில் ஒரு கால் இழந்தும்
இரட்டை குழல் துப்பாக்கி ஏந்தி
எவர் வரினும் தவிடு தவிடாக்கிய
உன் வீரத்தை
ஒற்றை கப்பல் பறித்துக் கொண்டதே்
நியாயமா???

இன்று உலகமறிந்த இந்திய
சூழ்ச்சிக்கு
என்றோ பறையடித்து மானம்
வென்ற மாவீரர்
உன் உயிர் உறைந்த எம் ஈழ தேசம்

உன் நினைவுகளால் உன்னை –
எங்களில் உயிர்பித்திருக்குமென்றே
கர்ஜிக்கிறோம்!

கப்பல் தகர்த்ததா(?) கடுந்தீ
தின்றதா(?) எல்லாம்
வரலாற்றில் இருக்கட்டும்;
இதயத்தில் விளக்காக என்றுமே
எரியும்
ஈழ தீபமே் அண்ணன் கேணல்
கிட்டுவே்

ஒரு சபதம் புரி;
என்று வரை ஈழ காற்று வீசுமோ
என்று வரை தமிழாள் உயிர்
கொள்வாளோ
என்றுவரை ஒரு ஈழ தமிழருக்கான
சுவாசம் இயங்குமோ
என்றுவரை தமிழனின் கடைசி சப்தம்
அடங்குமோ
அன்றுவரை அத்தனை இதயமும்
உனை தாங்கியே
உயிர் பூண்டிருக்கும்;

உனக்காய் ஒரு சொட்டேனும்
கண்ணீர்
சொட்டிக் கொண்டே இருக்கும்!!

*- வித்தியாசாகர்*



High Quality CCTV Systems and professional Installation for an affordable price ?

4 CAMERA Package :
From £699
4 CHANNEL D1 DVR
4 Cameras
1TB HDD
IR, 650TVL

8 CAMERA Package :
From £1299
8 CHANNEL D1 DVR
8 Cameras
2TB HDD
IR, 650TVL

16 CAMERA Package :
From £2099
16 CHANNEL D1 DVR
16 Cameras
4TB HDD
IR, 650TVL

Soft Teck
tel: 02034884884
email: info@soft-teck.com
web: www.soft-teck.com

# சுரங்கப் பாதை ரயில் சேவையின் 150ஆவது வருட நிறைவு

உலகின் மிகச்சிறந்த போக்குவரத்து சேவையாக கணிக்கப்படும் லண்டன் மாநகர சுரங்கப் பாதை ரயில் சேவை, தனது 150ஆவது நிறைவை 09.01.2013 தொடக்கம் 2013 ஆண்டு இறுதிவரை கொண்டாட இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. லண்டன் மாநகர போக்குவரத்து நூதன சாலையுடன் ஒருங்கிணைந்து, லண்டன் சுரங்கப்பாதை ரயில் சேவை பல நிகழ்ச்சிகளை தொகுத்துள்ளதாக அறிகிறோம்.

இதன் முன்னோடியாக கூகுள் வலைத்தளம் தனது அபிமானத்தை தெரிவிக்கும் முகமாக சுரங்கப்பாதை ரயில் சேவையின் வரைபடத்தை கணனியின் முகப்புப் பதிலாக அடையாளம் காட்டி 09.01.2013இல் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது. 1863ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09ஆம் நாள், படிங்ரன் (Paddington) ரயில் தரிப்பிலிருந்து ப்பரிங்கன் (Farrington) தரிப்பு வரை ஆரம்பிக்கப்பட்ட சுரங்கப்பாதை ரயில் சேவையின் முதன் முதலாக நடாத்தப்பட்ட மெட்ரோ பொலிட்டன் சேவையாகும்.

நீராவியால் இயக்கப்பட்ட புகையிரத என்ஜின் தான் முதன்முதலாக இச்சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. அதேபோன்ற மாதிரி என்ஜின் இன்னமும் நூதன சாலையில் வைத்து பராமரிக்கப்படுவது கடந்த கால சரித்திரத்தை நினைவூட்டுவதாக அமைகிறது.

ஏழு தரிப்புகளுடன் பிற வீதியிலிருந்து ப்பரிங்டன் வீதி வரை ஆரம்பித்த சேவையில் இன்று 263 தரிப்புக்கள் சேர்க்கப்பட்டது. 150 வருட வளர்ச்சியில் அடையாளமாகும். இன்றும் ஆரம்பத்தில் உருவாக்கிய அதே 7 தரிப்புகளும் சேவையில் இருப்பது வரவேற்கப்படுகிறது.

படிகளினூடாக ஏறவும், இறங்கவும் வயது முதிந்தவர்களுக்கும், அங்கவீனர்களுக்கம் உதவு முகமாக, தானாக இயங்கும் படிகளை (Escalator) முதன் முறையாக 1911ஆம் ஆண்டில் தான் நிறுவ முடிந்ததாக கூறப்படுகிறது. இப்போதெல்லாம் எங்கு பார்த்தாலும் எஸ்கலேட்டர் இயங்குவதை முக்கிய தரிப்புகளிலும் காணக்கூடியதாக இருப்பது கண்கூடும் காட்சி.

ஆண்களுக்கு நிகர் சமமாக பெண்களும் ரயில் சாரதிகளாக சேவையில் ஈடுபட 1978ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டியிருந்தது. இப்போதெல்லாம், ரயில்களில் மட்டுமல்ல வங்கிகள், விமானங்களில் ஏன் விண்வெளிப் பயணங்களில் ஈடுபடவும் பெண்கள் தயாராகி விட்டது அவர்களுக்குக் கிடைத்த உரிமை.

ஆண்டுதோறும் 1.2 பில்லியன் பயணிகளுக்கு சேவை செய்வதைப் பாராட்டி, 10 விசேட தபால் முத்திரைகளையும், புதிய 2 பவுண் நாணயங்களையும் வெளியிடப் போவது நிகழ்ச்சி நிரலில் அடங்கியுள்ளதாக அறிகிறோம். இச்சேவையில் ஈடுபடும் அனைத்து ஊழியர்களுக்கும் பயணிகளின் சார்பில் நன்றி

# வெயிலை காணாத வேலையாட்கள்

தகதகவென வெயில் மேனியை சுட்டெரித்தாலும், சூட்டினால் உடல் வியர்வை நனைந்தாலும், பகல் பொழுதை பல மணித்தியாலங்கள் அனுபவிக்கும் பாக்கியம் ஆசிய நாடுகளில் பிறந்தவர்களுக்கே கிடைத்த அதிஷ்டம். ஏனெனில் ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்களுக்கு குளிர் காலம் தொடங்கி விட்டாலே சூரியனைக் காண தவம் கிடப்பதாக, சமீபத்தில் வெளியான ஆய்வுக் கோர்வை தெரிவிக்கிறது.

பிரித்தானியாவில் இடம்பெற்ற கருத்துக் கணிப்பின் பிரகாரம் 50 விழுக்காடு பிரித்தானிய வேலையாட்கள், சூரிய வெளிச்சத்தை பகல் இடைவேளையின் போது தான் காண்பதாக விபரங்கள் தெரிவிக்கின்றன. இந்த இடைவேளை கூட கிடைக்காத வேலையாட்கள் வார இறுதியில் தான் காண முடியுமெனத் தெரிவிக்கிறார்கள். வார இறுதியில் கூட வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் கால் பங்கினர், சூரியனைக் காண முடியாமல் காலத்தைக் கழிப்பதாக தமது ஏக்கத்தைத் தெரிவிக்கின்றனர். இருப்பினும் அரைப்பங்கினர் ஒரு சில வார இறுதியில் வீட்டுக்கு வெளியே வந்து பகலை அனுபவித்ததாக கூறுகின்றனர். சுருக்கமாகச் சொல்லப் போனால், இவர்கள் எல்லாம் முழு நேர ஆந்தைகள் போல வாழ்வதாக உறுதிசெய்கிறார்கள்.

குளிர்காலம் தொடங்கியவுடன் காலை 8 மணிக்கு உதயமாகும் சூரியன் மாலை 3 மணியுடன் மறையும் போது வேலைக்குப் புறப்படும் போதும் இரவு வேலையால் திரும்பும் போதும் இரவு எப்படித்தான் சூரியனைக் காணமுடியுமென தமது எரிச்சலை அனேக வேலையாட்கள் வெளிப்படுத்துகின்றனர்.

நீண்ட இரவுகளில் நித்திரையின்மையாலும், வெளிச்சத்தைக் காணாமல் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் குளிர்கால வாழ்க்கை அனேகருக்கு மன உளைச்சலையும், உடலில் போதுமான சக்தியை இழந்து விட்டது போன்ற பிரமையையும் உண்டாக்குவதாக 37 சதவிகிதத்தினர் தனது உள்ளக்கிடக்கையை ஆய்வாளர்களிடம் கூசாமல் தெரிவித்துள்ளனர்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கும் நீண்ட இரவு, திரும்பவும் பழைய நிலைக்குத் திரும்ப 9 மாதங்கள் காத்திருக்க பொறுமையில்லாத பிரித்தானிய மக்களில் 17 சதவிகிதத்தினர் சூரிய வெளிச்சத்தைத் தேடி தமது விடுதலைப் பயணங்களை மேற்கொள்வதாகவும் ஒரு சில தகவல்கள் கூறுகின்றனர். வெயிலின் அருமை குளிரில் தான் தெரியும்.

# புதிய பொறிமுறை

2011ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ரோக்கியோவை அதிர வைத்த நிலநடுக்கம் ஜப்பானில் உயர்ந்து அழகான தோற்றத்துடன் நிமிர்ந்து நிற்கும் 797 கட்டிடங்களை ஆட்டம் காண வைத்ததுள்ளது. இவையனைத்தும் 100 மீற்றர்களுக்கு கூடுதலான உயரமுடையதாகக் காணப்பட்டுள்ளது. இவற்றில் 150 கட்டிடங்கள் 30-40 வருடங்கள் வயதானதாக இருக்க வாய்ப்புண்டு. இத்தகைய கட்டிடங்கள் எழுப்புவதற்கான சிந்தனை கூட மேலும் 30 வருடங்கள் பழமையானதாக கோகாகுயின் என்ற ரோக்கியோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் TAKURO YOSHDA கூறுகிறார்.

ஜப்பானில் மிகப்பிரபல்யமான கட்டிட நிறுவனம் AKIRA MORI வருங்காலத்தில் 100 மீற்றர் உயராத வகையில் கட்டிடங்களை நிறுவவும், அகன்ற தளங்களைக் கொண்ட பதிவான வீடுகளை அமைப்பதும் ஆரோக்கியமானதென கூறுகின்றனர். இந்த ஆலோசனையின் அடிப்படையில் ஏற்கனவே பழைய கட்டிடங்களாகி விட்ட உயர்ந்த கட்டிடங்களை அழிப்பதற்கு ஆகவேண்டிய பொறிமுறைகளை ஆராய்ந்த போது, வெடிகள் வைத்து தகர்க்கும் தொழில் நுட்பம், சுற்றம் சூழலுக்கு நட்புடையதாக இருக்காதென கருதப்படுகிறது.

கட்டிடங்களை முற்றாக உடைப்பதற்கும் மீள் புணருத்தானம் செய்வதிலும் பெயரெடுத்த நிறுவனமான Taisri Corporation உயர்ந்த கட்டிடங்களை உடைப்பதற்கு புதிய பொறிமுறை கையாழ்வதற்கு முற்பட்டது. 140 மீற்றர் உயரம் கொண்ட கட்டிடத்தை மிக உயர்ந்த தளத்திலிந்தே மிகப்பக்குமாக ஆட்களின் பலத்துடனும் இயந்திர உதவியுடனும் படிப்படியாக மேலிருந்து கீழாக தரையிறக்கம் செய்ய முடிவு செய்துள்ளது.

அனேகமான கட்டிடங்களால் அலுமினியத்திலான தூண்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் இவற்றை உருக்கி கழிவுப் பொருட்களாக மாற்றுவது சுலபமென கட்டிடக் கலைஞர்கள் பரிந்துரைத்துள்ளனர். எனவே வருங்காலத்தில் கட்டிடங்களை அழிக்கவோ உடைக்கவோ வெடிமருந்துகள் தேவைப்படாதென அனுபவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது. இதனால் சுற்றம் சூழல் மாசுபடாமல் காப்பாற்ற முடியுமென நம்பப்படுகிறது.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.



# தலைமுறை



## தமிழ் விழி

*(ஒரு பேப்பருக்காக)*

திருநாவுக்கரசுக்கு போவது என்று முடிவெடுத்தபின் மனம் லேசாகியது. கடந்த இரண்டு கிழமைகளாக இடுப்பு முறிந்தாற்போல் வேலை. வேலை என்றால் அப்படி ஒரு வேலை. ஊடறுத்தோடும் பாரிஸ் நதிக்கரையோரத்தின் செயின்ட் மிசேல் பகுதியில் உள்ள ஒரு உணவகத்தில் சாண்ட்விச் செய்வதும், பிஸ்ஸா வேக வைப்பதும் அவனுடைய வேலை. தான் இல்லாவிட்டால் முதலாளி கடையை இழுத்து மூடி விடுவான் போன்ற ஒரு பதட்டத்தில் எப்போதும் பாய்ந்து பாய்ந்து வேலை செய்வான். அவசரமாக நின்ற நிலையில் சாப்பிட்டு முடித்து திரும்பவும் வேலைக்குப் பறப்பவர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரிய வரப்பிரசாதம் இதுபோன்ற சிறு கடைகள். மறுபுறமாகப் பார்த்தால், எப்போதும் அலைமோதும் கூட்டத்துடன் இருக்கும் இந்த இடங்கள் திருநாவுக்கரசுவின் முதலாளி போன்றவர்களுக்குக் கிடைத்த பாக்கியம்.

விற்பனைக்கு ஒரு ஆளையும் குசினியில் திருநாவுக்கரசுவையும் தனியாக வைத்து கடையை அமோகமாக நடத்திக் கொண்டிருந்தான் முதலாளி. சிறீலங்கன் ஆக்கள் நல்லா வேலை செய்வினம், ஒரு சிக்கலும் தர மாட்டினம் என்கின்ற போடப்படாத பதக்கங்களை மட்டுமே தக்க வைக்க உழைக்கும் கூட்டத்தில் ஒருவனாக அவனும் ஓடிக் கொண்டிருந்தான். லீவு கேட்கும் நாட்களில் மட்டும் இடைக்கிடை முறுகல் நிலை வரப் பார்க்கும் அவனுக்கு முதலாளிக்கும். பிறகு இரண்டுபேரும் இருவருக்கும் பாதிப்பில்லாத ஒரு சமரச நிலைக்கு வருவார்கள். முதலாளிக்கு அவன் தேவை அவனுக்கு முதலாளி தேவை. இருந்தாலும் ஒரு பயத்துடனேயே எப்போதும் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். உலகப் பொருளாதாரச் சிக்கல்களால் எல்லா நாடுகளுமே ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் நிலையில், இருக்கிற வேலையை இறுகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டிய பயமிருக்கிறது எல்லோரிடமும்.

திருநாவுக்கரசுவின் அண்ணன் முகுந்தன் பரிசின் எல்லைப்புற நகர் ஒன்றில் வசித்து வருகின்றான். திருநாவுக்கரசுவை முகுந்தன் தான் இங்கே எடுத்து விட்டிருந்தான். வந்து சேர்ந்ததும் அவர்களுடன் சேர்ந்து கொஞ்சக் காலம் இருந்தான். அண்ணன் தம்பியில் நல்ல பாசமாகத்தான் இருந்தான்? அண்ணிதான் கொஞ்சம் அகங்காரமாய் இருந்தா. அவர்களுடைய வீட்டை நினைத்தால் இப்போதும் இவனுக்கு ஆசையாக இருக்கும். ஊரில் இருக்குமாப் போல் தாராளமான காணியோடு சேர்ந்த வீடு. முற்றத்தில் ரோஜாப்பூ செடிகள் இருபுறமும் மஞ்சளும் செஞ்சிவப்புமாய் பூத்து வரவேற்கும். படியேறியவுடன் ஒரு நீண்ட வராந்தா் அதன் இடதுபுறம் ஒரு பெரிய வரவேற்பறை. சுவர்கள் வெண்ணிறம் பூசப்பட்டு இருக்கும். ஆறு மின்குமிழ்கள் பொருத்தக்கூடிய தொங்கு விளக்கு வரவேற்பறைக்கு மெருகூட்டும். வெள்ளை நிறத்திலான யன்னல் மறைப்புக்களுடனும் அதே நிறத்திலேயான இருக்கைகளுடனும் அதிகமில்லாத அளவான ஆனால் பெறுமதி மிக்க அலங்காரப் பொருட்களுடனும் வரவேற்பறை ஜொலிக்கும். கைகளால் எங்காவது தொட்டுத் தடவிப் பார்த்தாலும் ஒரு தூசு கிடைக்காது. அப்படி வீட்டை வைத்திருந்தா அண்ணி.

வரவேற்பறையை தொடர்ந்து பெரிய மரத்தினாலான மேசையுடனும் சுற்றி வர வைத்து அதற்கேற்ற இருக்கைகளுடனும் கூடிய பளிச் சென்ற உணவருந்தும் பகுதி. அவன் வந்த ஆரம்பகாலங்களில், சாப்பிட இருக்கும்போது மேசையில் தன்னுடைய முகத்தைப் பார்த்து மேசையின் தரத்தை எண்ணி வியந்திருக்கிறான். வராந்தாவின் வலது பக்கம் சமையலறை அமைத்திருந்தது. அப்படியே வராந்தாவைப் பின் தொடர்ந்தால் ஒரு குளியலறை இருக்கும். அதனிடையே முதலாம் மாடிக்கான படிக்கட்டுக்கள் அமைந்திருக்கும். மாடியிலே இரண்டு அறைகளும், ஒரு அலுவலக அறையும், குளியலறையும் இரண்டு பக்கங்களிலும் அமைந்திருக்கும். ஒவ்வொரு அறையும் வெவ்வேறு வகையில் அலங்கரிக்கப்பட்டு கண்களைப் பறிக்கும்.

வீடு மட்டுமில்லை அண்ணி வெளிக்கிட்டு வெளியே போனால் கூட கடந்து போகிறவர்கள் ஒருதரம் திரும்பிப் பார்த்துவிட்டுத் தான் போவார்கள். நல்ல வசதியான குடும்பத்தில் ஒரு குறையுமில்லாமல் வளர்ந்து வந்ததால் கர்வம் கூடவேயிருந்தது.

திருநாவுக்கரசு பிரான்சுக்கு வந்தபோது அவனுக்கு இருபத்தெட்டு வயதாயிருந்தது. மொழி படிக்கக் கொஞ்சக் காலம் போனான். பிறகு அப்பிடியே தொழிற் கற்கைக்கூடாக உணவகம் ஒன்றில் வேலை செய்யத் தொடங்கினான். படிக்கும் பயிற்சிக் காலத்தில் படித்த ஒரு பெண்ணின்மேல் (தமிழ்ப்பெண்தான்) காதல் வர அதை வீட்டில் சொல்ல அண்ணி துள்ளிக் குதித்தா. அப்போதுதான் தெரியும் அவனுக்கு அண்ணி தனது சொந்தக்காரப் பிள்ளை ஒன்றுக்கு அவனைக் கலியாணம் செய்து வைக்க நினைத்துக் கொண்டிருந்தவ என்று. அவனுக்கு தன்னை நம்பிய பிள்ளையைக் கை விட விருப்பமில்லை. இனிமேல் அண்ணனின் வீட்டில் இருப்பது சாத்தியமில்லை என்றும் உணர்ந்து கொண்டான். அந்தப் பிள்ளையின் பெற்றோருடைய சம்மதத்தோடு திருமணத்தை முடித்து தனியே போய் விட்டான். அன்றிலிருந்து இன்று வரை அண்ணன் குடும்பத்தாருடன் எந்தப் பேச்சு வார்த்தையுமில்லை. இருபது வருடங்களாகி விட்டது. அண்ணனை நினைக்கும்போது கவலையாக இருக்கும். அவர் நல்லவர்தான். குடும்பம் ஒழுங்காகப் போக வேணுமென்றால் யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்துப் போகத்தானே வேணும்.

இப்ப திடீரென்று இரண்டு கிழமைக்கு முதல் ஒரு தொலைபேசி அழைப்பு வீட்டுக்கு வந்ததும் கொஞ்சம் அதிசயித்துப் போனான் திருநாவுக்கரசு. அண்ணன்தான் எடுத்திருந்தார். குரல் கொஞ்சம் மாறிப் போயிருந்தது. செரினுக்கு கலியாணம் பேசி முடிச்சிருக்கிறம் வார மாதம் பத்தாம் திகதி கலியாணம் நீ குடும்பத்தோட வா! என்றார் அண்ணன். ஆர் செரின் என்று கேட்க வாயெடுத்து பிறகு கேள்வியை மாத்தி மூத்தவளோ என்று கேட்டான். 'ஓம்' என்று பதில் வந்தது. பிறகு என்ன கதைக்கிறது என்று தெரியவில்லை. அவர் என்ன நினைத்தாரோ "டெலிபோனில சொன்னாச் சரியோ அல்லது நேர்ல வந்து சொல்ல வேணுமோ" என்றார். அவன் திடுக்கிட்டு "இல்லை இல்லை , நீங்கள் விலாசத்தை அனுப்புங்கோ" என்றான். "தாலிகட்டு பத்து மணிக்கு, நீ அதுக்கு முதல் வீட்டை வா எல்லாரும் சேர்ந்து போகலாம் அப்ப சரி நான் வைக்கிறன்" வைத்து விட்டார் அண்ணன். அவர் கதைத்த நாளில இருந்து அவனுக்கு ஒரே யோசனை. என்ன நடந்தது இவையளுக்கு? இவ்வளவு காலமும் இல்லாமல் இப்ப என்னெண்டு திடீரென்று, அதுவும் கலியாணத்துக்குக் கூப்பிடுகினம். அவனுடைய மனைவிக்கு இது பெரிய சிக்கலாகத் தெரியவில்லை. "அவை எங்களை மதிச்சுக் கூப்பிட்டால் நாங்களும் போய் எங்கடை கடமையைச் செய்து போட்டு வருவோம்" இதுக்கு ஏன் மண்டையைப் பிக்கிறீங்கள் எண்டு தெரியேல்லை என்று சிரித்தாள். "அண்ணன் சிலவேளை அண்ணிக்குத் தெரியாமல் கூப்பிடுறாரோ?" "இருக்காதப்பா, அவையின்ர பிள்ளையின்ர வீட்டு கலியாணத்தில அவையே குழப்பம் வரச் செய்வினமே?" இப்பிடி மாறி மாறி யோசிச்சு கடைசியில போய்ப் பாக்கிறது என்று முடிவாயிற்று.

ஒரு மாதிரி லீவும் எடுத்து போகிற நாள் வந்தபோது கொஞ்சம் மனதுக்குள் குறுகுறுத்தது. இருபது வருசத்துக்குப் பிறகு அண்ணன் வீட்டு உறவுகளை எதிர்கொள்ளும் நிலை சங்கடமாகத் தோன்றியது. பிள்ளைகள் பெரியவர்களாகி விட்டதால் அவர்களுடனான அறிமுகம் எப்படி இருக்கும் என்று நினைக்க முடியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலே அண்ணியை எதிர்கொள்வது மிகக் கடினமாகத் தெரிந்தது. மனைவியிடம் நேற்றிரவே சொல்லி விட்டான் "எங்கடை அண்ணியைப் பற்றி உனக்கு வடிவாத் தெரியும், அதுக்கேற்றமாதிரி வெளிக்கிட்டுக் கொண்டு வா" என்று.

வீட்டை அடைந்து உள்ளே போனபோது, அண்ணன் வாகனத்தில் பொருட்கள் ஏற்றிக் கொண்டிருந்தார். இவனை மனைவி பிள்ளைகளுடன் கண்டதும் அவருடைய முகம் மகிழ்ச்சிக்கு மாறியது. வேலையை விட்டு விட்டு வாங்கோ உள்ள வாங்கோ என்று அழைத்தார். வரவேற்பறை முன்பு போலவே அழகாயிருந்தது. அண்ணி உள்ளேயிருந்து வந்து வாங்கோ உள்ள என்றா. அவனுக்கு அண்ணியைப் பார்க்க இது அண்ணிதானா என்று அதிசயமாக இருந்தது. ஆள் மெலிந்து முன்பு குரலிலிருந்த கர்வம் காணாமல் போயிருந்தது. காலம் எவ்வளவு மாயங்கள் செய்கிறது? செரின் மேலேயிருந்து அரைகுறை தலைமுடி அலங்காரத்துடன் ஓடி வந்து சித்தப்பா வாங்கோ என்று அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள். சித்தி எப்பிடி இருக்கிறீங்கள் என்று அவனுடைய மனைவியையும் இழுத்து, ஏன் நிக்கிறீங்கள் இருங்கோ என்று அவர்களை இருத்தினாள். அண்ணி அவளைப் பார்த்து பிள்ளை நேரம் போகுது நான் அவையளைக் கவனிக்கிறான் நீ போய் வெளிக்கிட்டு முடி என்றாள். "ஓமம்மா! சித்தப்பா சித்திக்கு ஏதாவது சாப்பிடக் குடுங்கோ! நான் இவை பிள்ளைகளை என்னோட கூட்டிக் கொண்டுபோறன், என்னோட அவை கதைச்சுக் கொண்டிருப்பினம்" சொல்லி விட்டு அவர்களைக் கூட்டிக் கொண்டு மேலே போய் விட்டாள்.

"இந்தப் பிள்ளையளுக்கு இருக்கிற யோசனை பெரியாக்கள் எங்களுக்கு இருக்கிறேல்லை" என்றார் அண்ணன். திருநாவுக்கரசு கதைக்க வழியின்றி தலை குனிந்திருந்தான். எங்கடை தலைமுறை எங்களை வழிநடத்தும் என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

திருநாவுக்கரசுவுக்கு கண்ணீர் வருமாப் போல் இருந்தது. செரின் ஐந்து வயதாயிருந்த போது அவன் இந்த வீட்டை விட்டுப் போயிருந்தான். அதற்குப் பிறகு தன் வாழ்க்கையுண்டு என்று இருந்து விட்டான். அந்தக் குழந்தை இன்று வளர்ந்துதான் கூட இருந்து வளர்த்த குழந்தை போல சித்தப்பா என்று அரவணைக்கிறதே! இது எப்படி? கொஞ்சக் காலமாக செரின் தான் தன்ர கலியாணத்துக்கு எல்லாச் சொந்தங்களையும் கூப்பிட்டு செய்ய வேணும் எண்டு கதைச்சுக் கொண்டிருக்கிறவள். நீ எங்களோடை இல்லாட்டாலும் அவள் அடிக்கடி சொந்தங்களைப்பற்றிக்கேட்டுத்தெரிஞ்சு கொண்டிருக்கிறவள். சும்மா சின்னச் சின்னப் பிரச்சகைளுக்கெல்லாம் வருசக் கணக்கில எப்பிடிக் கதைக்காமல் இருக்கிறனீங்கள் எண்டு எங்களோட சண்டை பிடிப்பாள். "இந்தப் பிள்ளையளுக்கு இருக்கிற யோசனை பெரியாக்கள் எங்களுக்கு இருக்கிறேல்லை" என்றார் அண்ணன். திருநாவுக்கரசு கதைக்க வழியின்றி தலை குனிந்திருந்தான். எங்கடை தலைமுறை எங்களை வழிநடத்தும் என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from concept to design

# தை பிறந்தால் வழி பிறக்கும்...

- சுஜித்



தை பிறந்தால், தை பிறந்தால்
எதையும் இருமுறை அழுத்திச் சொல்லின்
அதுவும் கவியாகும் என்ற வழக்கமிருப்பதால்
இதையும் இரு முறை அழுத்திச்
சொல்லியாயிற்று
எனவே இதுவும் கவியாயிற்று

உழவர்க்கெல்லாம் தமிழருக்கெல்லாம்
ஒரு திருநாள், பெருந்திருநாள்,
“எங்கள் தைத்திருநாள்”
வேலைத்தளத்து பண்டிகை உபரித்
தொகையொன்றும்
வீதிகளில் வான வேடிக்கைகள் என்றும்
தீபாவளி தலை நிமிர்த்தி நிற்க
எங்கள் தைத் திருநாள்
கைபேசிக் குறுஞ் செய்தியாய்
சுருங்கிப்போய் விட்டது.

சமணம் சமயத் தீபாவலி (தீப–ஆவலி)
இன்று இந்து சமயத் தீபாவளியாய்
இடத்திற்கிடம் வெவ்வேறு காரணம் சொல்லி
விசாலித்து நிற்க, விலாசம் இழக்கும் – எம்
தமிழ்த் திருநாளின் அவசியம் சொல்லி
ஊடக்காரர்கள் தான் அதை
உயர்த்தி நிறுத்த வேண்டும்

தை பிறந்தால் வழி பிறக்குமா
இல்லை தொடர்ந்தும் வலிதான் பிறக்குமா –
என்று கிலிதான் பிறக்கிறது எனக்கு

கலையென்ற பெயரில் கபடமும்
நாகரீகம் என்ற பெயரில் நாசங்களும்
தொழில்நுட்பம் என்ற பெயரில்
தொல்லைகளும் தான்
இன்று பரவலாய்க் கிடக்கின்றன

இப்பொழுதே இங்கே “பரவலாய்” என்பதை
அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள் – காரணம்
இதற்காய் பின்னர் நான் உங்களிடம்
அடி வாங்கத் தயாராய் இல்லை
முழுமையாய் அல்ல
பரவலாய்க் கிடக்கின்றன

ஒரு மனிதனின் எண்ணம்தான் அவன்!
அல்லது அவள்
எண்ணம் உருவாகும் தொழிற்சாலை சமூகம்
இந்த முதலாளித்துவம் தந்த சமூகம்
எங்களுக்கு நஞ்சூட்டிக் கொண்டிருக்கிறது
பணம் சேர், அடுத்தவனிலும் உயர்,
முடிந்தால் பிரபலமாகு, முக்கியமாய்
முக்கியமாய் பயனில்லை எனினும் வாங்கு!

அன்பாய் இரு, பண்பாய் இரு,
உதவி செய் முடியாவிடில்
உபத்திரபம் ஆவது செய்யாதே
என்பவை எல்லாம்
காலாவதியான கடைச் சரக்காகி விட்டது
இப்படிப்போனால் வழி பிறக்குமா?
வலி தொடருமா?

என் கிலியில் நியாயம் இருக்கிறது
ஒரு இனம் தனித்து நிலைத்து நி;ற்க
வேண்டுமென்றால்
அதற்கான  கலை பண்பாடு அவசியம்
இன்று ஈழத்தமிழனின் கலை
கோடம்பாக்கத்திற்குள் சிக்கிக் கிடக்கிறது

சொந்த நாட்டில் பஞ்சமே வந்தாலும்
பரவாயில்லை என்ற நிலையில்
பஞ்சு வசனங்களை நம் நாளைய
தூண்களாகிய பிஞ்சுகள் பேசி,
இன்று புளகாங்கிதம் அடைகின்றன

அரிவாள் பழக்க வழக்கத்தையும்
அடியாள் பழக்க வழக்கத்தையும்
பெண்ணைப் போதைப் பொருளாக்கியும்
நவ நாகரீகம் என்ற பெயரில்
நலம் கெட்ட செயல் புரியும்
“கலை வளர்க்கிறோம்” பேர்வளிகள் பலரை
அதற்குள்தான் அதிகமாய்ப் பார்க்க முடியும்
இவர்கள் பரிசைகேட்டினைப்
போய்ப் பார்க்கவே,
நாம் 10 பவுண் குடுக்கவேண்டும்

போரால் பொசுங்கிப் போய் வாழ வழியற்ற
மக்கள் இருக்கும் அதே நாட்டிற்குள்
தலை தளபதி என்று கட்டவுட்களுக்கு
பாலூற்றி அபிசெகம் செய்யும்
அசிங்கங்கள் எல்லாம்
அரும்பத் தொடங்கி விட்டன
எங்கு போகிறது? எவர் பின்னே போகிறது
என் ஈழத்தமிழினம்?

கடுகு சிறிதெனினும் காரம் பெரிது
என்பது போல
பெயரில் மாத்திரம் தான் அது சின்னத்திரை
அது தரும் சமூக அழிவிற்கு இல்லை வரையறை
அதன் அதிர்வுகள் போகும் கர்ப்பிணித்தாயின்
குழந்தை தூங்கும் கருவறை
என் தாய்மார்கள் எல்லாம் அந்த
சீரழிந்த சின்னத்திரைக் கிரை

வக்கிரகுணம், வன்புணர்வு
கள்ளத்தொடர்பு, கொலையெண்ணம்
பொறாமை, பேராசை, ஆக
மலிந்த சிந்தனைதான் அதன் குணாதிசயம்
தெரிந்தும் அடிமையாகிறோமே – அதுதான்
உலகின் புதிய எட்டாவது அதிசயம்

நாங்களும்
கல் தோன்றி மண் தோன்றாக்
காலத்தே வாளோடு முன் தொன்றிய
மூத்த தமிழ்க்குடி என்று கூறியபடி
எம் இளையோர்கள் இங்கே
ஈழக்கலை வளர்க்கப்
புறப்பட்டு இருக்கிறார்கள்
என் அருமைச் சகோதரர்களே!
எம் இனத்திற்கான கலை
எம்மையும் எம் வாழ்வியலையும்

பிரதி நிதித்துவப் படுத்தி
நம் ஒவ்வொருவரின் ரசனையினையும்
சிந்தனா சக்தியினையும் உயர்த்தும்
சமூக வளர்ச்சிக்கானதாய் இருக்கவேண்டும்,

இவையல்லாமல் அவர்களைத் துரத்திவிட்டு
நாங்களே இங்கே குப்பை கொட்டுவோம் –
என்று நீங்கள் சொல்வீர்களாயின்
அதற்கு அவர்களே கொட்டலாம்

சிந்திப்போம் செயற்படுவோம்!
உலக மயமாக்கலும்
தொழிநுட்பமும் இன்றைய
உலகத்தினை ஓர் சிற்று}ர் போலச்
சுருக்கி விட்டதென்னவோ உண்மைதான்
ஆனால் அது எம்மை
சுதந்திரமாய் இருக்க விட்டதா?

நாங்கள் கதவுகளையும் சாளரங்களையும்
அடைத்து வைத்தாற் கூட
மடியில் மடித்து வைத்திருக்கும்
பதினைந்து அங்குலப் பெட்டி வழியே
கொட்டி விடப்படும் குப்பைகளால்
நிறைந்து வழிகிறது எம் தலை

பயனில்லை எனினும்
வாங்கு என்பதைத் தாண்டி
பயனற்றதையும் பார், ரசி, ஏற்றுக்கொள்,
என்கிறாக்கி விட்டது
இலாபமொன்றையே மொழியாய்ப்
பேசத்தெரிந்த
இந்த முதலாளித்துவ உலகம்
சமனிலை சக்தியிளந்து
சரிந்து சவமாக்கப் பட்டதால்
வாழ்வில் “வெற்றியடை” என்ற
மாயக் கொடியின் கீழ்

பொருள் தேடி புகழ் தேடி – அடுத்தவர்
நலத்தில் சிறிதும் அக்கறை இன்றி
நானே நானே நானே என்று
தமக்குள் மந்திரம் ஓதியபடி இங்கு
மந்திரித்துக் கடிவாளம் பூட்டிய
குதிரைகளாய் என் சமூகம்!

தேவையற்ற பொருளை
இல்லாத பணத்தினால்
இணையத்தில் தேடி வாங்கி
பிடிக்காதோர்க்கு பீடிகை காட்டியே
கடனாளியாகிறாய் நீ
பிறெய்ஸ் த லோட்டும்
அஸ்ஸலாமு அலைக்கும்
சொல்லும் அனேக வாய்களுக்கு
வணக்கம் சொல்லத் தயக்கம் இருக்கிறது

நடுகல் நம்பிக்கை, பழங்குடி நம்பிக்கை,
சிறுதெய்வம், பெருந்தெய்வம்,
கன்னித்தெய்வம், குலதெய்வம்
ஆசிவகம், சமணம், பௌத்தம்
என்று பல மார்க்கம் பார்த்தது தமிழ்
இன்று அனைத்து சமய, பிராந்திய

நம்பிக்கைகளினதும் கூறுகளை
இந்து சமயம் உள்வாங்கி
கதையெழுதித் தன்னுடமையாக்கியதால்
தமிழும் இந்துவும் ஒன்று போலாயிற்று
அதனாலேயே மதம் மாறியவன்
தான் தமிழ் இல்லையென்று
மனம் மாறுகிறான்
மொழி கடந்தால்லவா இறை நம்பிக்கை

கண்டவுடன் வணக்கம் சொல்கிறான் ஜி
தமிழ்ப் பற்றாம் எனக்கு
கண்டவுடன் “காய்“  சொல்கிறாய் நீ
ஆங்கிலப் பற்றா உனக்கு

காலனித்துவ மனோ நிலை
கடுகளவும் கரையாமல்
கயிறு திரித்தாற் போல்
கபாலமெல்லாம் முறுக்கி நிற்க

அம்மா அப்பாவையே
அடியோடு அகற்றி
மம்மியையும் டாடியையும்
மகிழ்வோடு நீ மழலைகள்
நாக்கில் ஏற்றுகிறாய்
உன்
மடமையான செயலாலே
பொங்கலென்ன
ஒரு நாள்
தமிழே தூக்கில்
ஏற்றப்படும்

அன்புடையவர்களே
உங்களை உயர்வாய்
எண்ணுங்கள்
அடுத்தவனையும்
அப்படியே எண்ணுங்கள்
விரும்பின் வானம்
பாருங்கள்
நிலத்தில் நடவுங்கள்
இயற்கையை மதியுங்கள்
இயற்கையை ரசியுங்கள்
மனிதம் வளருங்கள்
முக்கியமாய் எளிமையாய்
வாழப் பழகுங்கள்

தீதும் நன்றும்
பிறர்தர வாரா
நோதலும் தணிதலும்
அவற்றோ ரன்ன
நன்மை தீமை
அடுத்தவரால்
வருவதில்லை
துன்பமும் ஆறுதலும்கூட
மற்றவர் தருவதில்லை

ஒவ்வொர் வருடமும்
தை பிறக்கும்
ஒவ்வொர் நாளும்
புதிதாய் நாம் பிறப்போம்
தை பிறந்தால் வழி பிறக்கும்






# பூவரச மரங்களும் சில பின்னிரவுகளும்



யாழ்ப்பாணத்தின் புழுதி மண்டிய கிரவல் வீதிகளில் கழிந்தது என் பால்யம். கிரவல் வீதியும், அது சார்ந்த ஊரும் தேவதைக்கனவுகளின் மிச்சம்போல் இன்னும் நினைவிலிருக்கிறது. மருதங்குள வெளிகளில் நீந்தியும் ,கிட்டிப்புல்லு அடித்தும், விடிய விடிய கண்விழித்தும் கோஸ்டி பார்த்த நண்பர்கள் நினைவுகளில் மட்டும் எஞ்சியிருக்கிறார்கள். போர் தின்று சொரித்தது போக எஞ்சிய சிலரும் புலம் பெயர்ந்துவிட்டனர். குழம்பியிருந்த குளத்தில் வீழுந்த ‘போர்’க்கல் ஒவ்வொருவரையும் திசைக்கொன்றாய் சிதறி விட்டது. நான் வின்செட் வன்காவின் மங்கி ஒளிரும் மஞ்சள் வர்ணங்களுள் ஒதுங்கிக்கொண்டேன். பிதுங்கி வழியும் பாரிஸ் மாநகர சனத்திரளில், வயலில் துருத்திக் கொண்டிருக்கும் வெருளிகளாய் கண்ணில் தட்டுப்படும் அபூர்ப நண்பர்களை, கைகொடுத்து நலம் விசாரித்து, என்னை ஆசுவாசபடுத்திக் கொள்ளுகிறேன். இருபது வருட யாழ் வாழ்க்கையை துறந்து, பிரான்ஸ் வந்தது பெரும் கனவின் நீட்சி போலிருந்தது.

யாழின் அச்சமிகு பின்னிரவுகளையும், வெடிக்க காத்திருக்கும் வெடிகுண்டுகளை, நினைவூட்டும் பகல்களையும் உதறி, குளிர் மிகு பிரான்ஸ் வந்தது அழைக்கப்படாத விருந்தில் சரியான நேரத்தில் நுழைந்தது போலிருந்தது. நாங்கள் ஆங்கிலேயரால் காலனிப்படுத்த பட்டிருந்தோம். ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் இரு துருவங்கள். இங்கே எல்லாம் தலைகீழ் அதாவது ஆங்கிலேயருக்கு எதிர். வாகனங்களில் ஓட்டுனர் இருக்கை இடதுபக்கமிருக்கும். நேராக செல்லவும் என எழுதியிருந்தால் கீழ்நோக்கிய அம்புக்குறியிருக்கும். பேரூந்தினுள் வலது பக்கமாக நின்று ஏறவேண்டும். வந்த வுடனேயே எல்லாம் தலைகீழாக இருக்கிறதே என ஊகித்து , பேருந்தில் ஏறுவதற்கு பின் பக்க வாசலில் காத்திருந்தேன். ம்ூம் அது மட்டும் மாற்றமில்லை. ஏறும்போது முன்பக்க வாசலால் ஏறி , இறங்கும் போது பின்பக்க வாசலால் தான் இறங்க வேண்டும். பேரூந்தின் கதவுகள் மூடியபின்னர் தான் அது புறப்படும். பேரூந்துக்கு கதவு இருக்கிறது என்றால் ஊரில் யாரும் நம்பமாட்டர்கள். ரிக்கற் எடுக்க நடத்துனரை தேடினேன் அப்படி ஒரு இனமே இங்கு இல்லை.

பேரூந்தில் ஏறினால் ஓரிரு தமிழ் முகங்கள் தட்டுபடுகிறது, மெட்ரோ , திராமில் என்றால் ஐந்தாறு தமிழ் முகங்கள் தட்டுப்படுபடுகிறது, இதுவே தொடரூந்து என்றால் பத்து, பதினைந்து முகங்கள் தென்படுகிறது. வார இறுதிகளில் தமிழ்க் கலாச்சரம் பேணும் சேலை, சுடிதர் பெண்களும் தென்படுகிறார்கள். யாழ்பாணத்தில் கூட இவ்வளவு தமிழ் முகங்களை பார்க்கலாமா என்பது சந்தேகம்.

வலது, இடது குழப்பத்திலிருந்து அத்தனை குழப்பங்களும் ஒன்றாய் சூழ்ந்து கொண்டன. சித்தி மகனின் சைக்கிளை எடுத்து ஒரு ரவுண்டு அடிப்போம் என்றால், எதிரில் வருபவர்கள் எல்லோரும் எனக்கு இடிப்பது போல் வருகிறார்கள். தவறு எங்கோ நடக்கிறது என நிமிர்ந்து பார்பதற்குள் “டமால் டுமீல்”. சக்கரம் நெளிந்த சைக்கிளை தூக்கிக் கொண்டு பொடிநடையாய் வீடு வர வேண்டும். ஊரின் கிரவல் வீதி, கல்லு ஒழுங்கை , குச்சு ஒழுங்கைகளில் எல்லாம் பிரேக் இல்லாத சைக்கிளை வெற்றிகரமாக ஓடித்திரிந்த எனக்கு இது அவமானமாக பட்டது. மலைப்பாம்பு நெளிவுகளுடன் கிடக்கும் குச்சு ஒழுங்கைகளில் லவகமாக சைக்கிளை வெட்டி , வெட்டி போட்டிக்கு ஓடுவதை பெருமையாக நினைத்துக் கொண்டிருந்த எனக்கு இது பெருத்த அடி.

கல்லுறோட்டில் துள்ளி, துள்ளி குதிரையோட்டுவது போல சைக்கில் ஓடிய எனக்கு, பளிங்கு றோட்டில் நேராக ஓடுவது கிளர்ச்சியை கொடுக்கவேயில்லை. குச்சு ஒழுங்கையில் திருப்பங்களில் எதிர்ப்படும் (ஆபத்துக்கள்), அப்பு , மோனை என வேலியை பிடித்து நடக்கும் பாட்டிகள், புளிச்ச கள்ளின் ஏப்பம் விட்டபடி வேலியுடன் அலம்பும் அப்புக்கள். கீழ் பாரில் சைக்கிள் பழகும் பரயங்கள். ஒற்றை கையால் காற்றின் எதிர் திசையில் சைக்கில் ஓட்டும் பள்ளிக்கூட பெட்டைகள். என யாரும் இல்லாதது ஒருவித அதிர்ச்சியை கொடுத்தது. ரீவியில் கார் ரேஸ் ஓடும் சித்தியின் பையனிற்கு தெரியாது, அதனைவிட சகசம் நிறைந்தது அவன் பாட்டியின் ஊரில் சைக்கில் ஓட்டுவது என்பது. ஒரு ரீவி , ஓரிரு கேம் சீடி முடிந்தது அவன் உலகம்.

வானுயர கட்டிடங்களை நிமிர்ந்து பார்த்தபடி நடந்தால் எதிரில் வருபவர்களுடன் முட்டி, முட்டி விளையாட வேண்டியிருக்கிறது. மூன்றாம் உலக நாட்டிலிருந்து, முதற்தர நாட்டிற்கு வரும் சாதாரணவனுக்கு இருக்கும் அத்தனை எதிர்பார்ப்புகளுமிருந்தன. சாலையின் தரம் பிரமிக்க வைக்கிறது. எங்குமே சீரான தரம். யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் போது குன்று, குழிகளின் அடர்த்தியும், அகலமும் அதிகரிக்கும். கட்டுமானம், வாகனங்கள், சமிஞ்ஞைகள் அதிசயமாகவே தெரிந்தன.

சமிஞ்ஞைகளுக்கு காத்திருப்பவர்களை விநோதமாக பார்க்க வேண்டியிருக்கிறது. பாரிஸ் நகரத்து மக்கள் மென்பொருளில் இயங்குபவர்கள் போன்றிருந்தனர். சீரான, மிருதுவான ஆடைகள். நேரான, வேடிக்கை பார்க்காத நடை. பாரீஸின் சனத்திரளில் அபூர்ப ஐந்துவை போல் நான் மட்டும் வேடிக்கை பார்த்தபடி அலைந்தேன்.

திருவிழாவில் அம்மாவை தவறவிட்ட பதின்ம வயதினர் போல, சுதந்திரமாகவும், பயத்துடனும், கண்ணில் ஆர்வம் மின்ன சனத்திரளில் தேடிக் கொண்டிருந்தேன். இரவு வீடு திரும்ப தாமதமானால் பிரதான வீதிக்கும் வீட்டுக்குமிடையில் பதட்டத்துடன் நடந்து திரியும் ஐயாவையும், சோற்றுக்குள் அவித்த முட்டையை ஒளித்துத் தரும் அம்மாவையும், மண்வெட்டியுடன் நீரில் நின்று வெள்ளை பூத்த கால்களுடன் வீட்டு திரும்பும் அப்பாவையும் வயல் வெளிகளையும், கிரவல் மண் வாசனையையும், தொலைந்து போன கனவுகளையும், சிதறிப் போன பால்யகால நண்பர்களையும் கூடவே என் அமைதியையும்....

*- சாய்பிரசாத்*

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ சிங்களவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்

கண்டிய உயர் குடியைச் சேர்ந்த ஷிராணி பண்டாரநாயக்கவிற்கும் கரை நாட்டுச் சிங்களவர்களான ராஜபக்சேக்களிற்கும் இடையில் நடந்த மோதலை ஒரு சாதிப்பிரச்சனையாக்காமல் விட்ட சிங்கள மக்களிடம் இருந்து உலகெங்கும் வாழும் தமிழர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

## ■ அந்தோனியின் மோட்டு வியாக்கியானம்

தமிழ்நாட்டுத் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் முகமாக சிங்களப்படையினருக்கு தமிழ்நாட்டுக்குள் பயிற்சி கொடுக்காமல் மற்ற இந்திய மாநிலங்களில் வைத்துப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அந்தோனி புலம்பியுள்ளார். தமிழ்நாடு வேறு இந்தியா வேறு என்பதை அமைச்சர் அந்தோனி ஒத்துக் கொள்கிறாரா?

## ■ நாடு கெடுத்த அரசு

மே 17 இயக்கத்தின் தோழர் திருமுருகனுடன் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் நாடு கெடுத்த அரசைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் இலங்கை அரசு இப்போது பயப்படுகிறது என்றார். அதன் பின்னர் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கைதானார்கள். பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீது குற்றச்சாட்டுக்கள் சோடிக்கப்பட்டன, ஷிராணி பதவி நீக்கம் செய்யப்பட்டார், கோத்தபாய ராஜபக்ச அமெரிக்காவிற்கு நீயில்லாவிடில் எமக்கு சீனா இருக்கிறது என்றார். இது எல்லாம் பயந்த ஒரு அரசின் செயற்பாடா. மருத்துவரின் உடன் பிறப்பு ஒன்று கொழும்பில் ராஜபக்சேக்களுடன் வேலை செய்கிறது.

## ■ உடுப்பு சலவைக்குக் கொடுத்தது யாரிடமோ! கொக்கைக் கொண்டு வா என்றால்!

இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்தவர்கள், இந்திய வைத்தியசாலைகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றினூடாகவே வருகை தந்தனர். எனவே அவர்களிடம் போய்ச் சேர்ந்தவர்கள் தொடர்பில் இந்தியாவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமுமே பொறுப்புக்கூற வேண்டும் என கோத்தபாய ராஜபக்ச சொல்லியுள்ளார். என்ன மாதிரி பிட்டுப் போடுறாங்களப்பா!!! காயப்பட்டவர்களின் உடலுறுப்புக்களைத் திருடி விற்றது யார்?

## ■ புனிதப் போர் இலங்கையிலுமா?

இலங்கையில் தொடர்ந்து அரச இணையத் தளங்கள் ஊடுருவப்பட்டு முடக்கப் படுகின்றன. அரச பாதுகாப்புத் துறையின் தளத்தில் ஊடுருவி எல்லாவற்றையும் சிதைத்து விட்டு ஆட்டம் முடிந்துவிட்டது (Game Over)என்ற வார்த்தைகளை மட்டும் தெரியக் கூடியதாகச் செய்து விட்டு சென்று விட்டனர். சில பங்களாதேசத்தில் இருந்து ஊடுருவப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசல்களைத் தாக்கியமைக்கு புனிதப் போராளிகளின் பதிலடியா?

*-ஊருளவாரி*

வடிவமைப்பு | அச்சமைப்பு | வெளியீடு

நினைவு மலர்கள், வாழ்த்து மலர்கள், அழைப்பிதழ், துண்டுப் பிரசுரங்கள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் அனைத்து தமிழ், ஆங்கில அச்சு வடிவமைப்பு வேலைகளை நியாயமான விலையில் குறுகிய காலத்தில் அழகுற அமைத்துக்கொள்ள அழையுங்கள்....

விசேட விலைக்கழிவுகள்!!

விபரங்களுக்கு : 020 7043 4319

இலங்கையில் எந்தப் பாகத்திற்கும்
வீட்டுக்கு வீடு சேவை....



பொருட்கள் பெறுக் கொள்ளும் இடங்கள்
* GREENFORD * WIMBLEDON * VAUXHALL * BIRMINGHAM
* STOKE-ON-TRENT * A-LANKA TRAVELS LTD, TOOTING

- இலங்கையில் சகல இடங்களுக்கும் வீட்டிற்கு நேரடியாக விநியோகம்.
- விசேட சலுகைகள்
- இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்
- இரண்டு நாட்களில் கொழும்பிற்கான துரித தபால் சேவையும் உண்டு

- Vehicle Shipping
- Furniture Shipping
- Express Letter Service
- Packing Service
- Relocation Service
- Man and Van Service
- Packing Materials
- European Parcel Service

DUNN SHIPPING LTD.
07949361434
07949361313
Door to Door Delivery
67, Gap Road, Wimbledon, SW19 8JA.
020 8842 2020
info@dunnshipping.co.uk
www.dunnshipping.co.uk

# விலகு பெருமரமே

என் நண்பன் ஒருவன் அண்மையில் யாழ்ப்பாணம் சென்று வந்தான், நிறையப் புதினங்கள் அவன் கைவசம் இருந்தன. ஒவ்வொன்றாக எடுத்து விட்டான். நான் மிகமிக துக்கப்பட்டது, அவன் கூறிய ஒரு புதினத்தைக் கேட்டே 'யாழ்ப்பாணம் இப்பொழுது இந்தியாவின் ஒரு மாநிலமாக மாறிவிட்டது' என்பதே அச்செய்தி.

யாழ்ப்பாணத்தில் எங்கு பார்த்தாலும் இந்திய பொருள்களுக்கான விளம்பரம். எந்தச் சந்தையிலும் விற்கப்படுவது இந்தியப் பொருள்கள். இந்திய கலாசாரம் மெல்ல மெல்ல யாழ்ப்பாணத்தை மேவி ஆக்கிரமித்தபடி வருகிறது. 'இதற்காகத் தான் விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு பெரும் துணை புரிந்தது இந்தியா'. என்ற கருத்தினையும் அவன் சொன்னான்.

உலகம் முழுமையில் இதுவே நிகழ்கிறது. ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம் என்ற சொல்லாடல்கள் இவற்றிலிருந்தே வருகின்றன. தமது சந்தை வாய்ப்புகளுக்காக நாடுகளை தேடிப்போகின்றன இவ்வகை ஏகாதிபத்தியங்கள். அவை மதத்தின் பெயராலும், மார்க்கியத்தின் பெயராலும், ஜனநாயகத்தின் பெயராலும், அபிவிருத்தியின் பெயராலும், பயங்கரவாத எதிர்ப்பின் பெயராலும், தம் சுரண்டல்களையும், சந்தை வாய்ப்பையும் தேடிக் கொள்கின்றன.

ஆனால், இதே இந்தியா, அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்கும், வேறு சில ஏகாதிபத்தியங்களுக்கும் தமது நாட்டை விற்றுவிடுகின்றது. அவ்ஏகாதிபத்தியங்களின் கழிவுக் கூடையாக, சந்தையாக, சுரண்டல் நிலமாக, பரிசோதனைக் களமாக, பல்வேறு விதமாக இந்தியா தன் வளத்தைக் கொடுத்து நிற்கிறது. கூடங்குளம் போராட்டமாக இருந்தால் என்ன, பழங்குடி இன மக்கள் போராட்டமாக இருந்தால் என்ன, மாவோயிஸ்க்களின் கோபமாக இருந்தால் என்ன, யாவும் இவ்வகையான எதிர்ப்புக் குரல்களே.

சிறிய மீன்களை பெரிய மீன் விழுங்க, பெரிய மீன்களை சுறா, திமிங்கிலம் போன்றன விழுங்குவதற்கு ஒப்பானது இது. அதாவது, இலங்கை, நேபாளம் போன்ற சிறிய நாடுகளை இந்தியா விழுங்க, இந்தியாவை அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் விழுங்குகின்றன. இவை தாம் நமக்குச் சொல்லப்பட்ட உலக ஒழுங்கு. அதற்குப் போத்தப்பட்ட போர்வை தான் ஜனநாயகம். அதன் பெயரால் நடாத்தப்படும் அட்டூழியங்கள் தான் நாம் காண்பதும், அனுபவிப்பதும்.

சேரன் ஒரு கவிதை சொன்னார்,

*'சிறு புள்ளி என் தேசம் / இச்சிறு புள்ளியில் மலரும் பட்டிச்செடி என் ஆத்மா /இந்தியப் பெருமர நிழலில் சோகை பிடித்த வாழ்வு / வேண்டாம் இந்த பட்டிக்கு / விலகு பெருமரமே / ஒளிவிழட்டும் / உன் விழுதுகளை வெட்டுகிறேன் / வழி வரட்டும்'* ஒரு சிறிய தேசத்தின் ஆன்மாவாக இக்குரல் ஒலிக்கிறது.

இது மகா உண்மை. இந்தியா என்கின்ற பெரிய ஆலமரத்தின் நிழலில் சோகை பிடித்த சிறு மரமாக நாங்கள் இருக்கின்றோம். சூரிய ஒளி கிடையாது. ஒளி வர அந்த ஆலமரம் விடுவதில்லை. எனவே, பச்சையம் என்ற உணவை தயாரிக்க முடியாது, இச்சிறுமரம் அவலப்படுகிறது. அழுது கண்ணீர் விடுகிறது.

மகிந்தாவின் அராஜக அரசு இவ்வாறான அனர்த்தங்களையே நிகழ்த்துகின்றது. சிங்கள தேசத்தை சீனாவிற்கும், தமிழ்த் தேசத்தை இந்தியாவிற்கும் தாரை வார்த்துக் கொடுத்திருக்கிறது. இது ஒரு சூழ்ச்சி அரசியல். சிங்கள மக்களுக்கு சீனா பிரச்சினை இல்லை, தமிழ் மக்களுக்கு இந்தியா பிரச்சினை இல்லை. நமது தந்தையர் தேசம் இந்தியா என்ற பிரமிப்பிலிருந்து தமிழர் இன்னமும் விலகுவதாக இல்லை. தம் பிள்ளைகளை கழுத்து நெரித்துக் கொல்கின்ற தந்தையை 1987, 88, 89, 90 ஆம் ஆண்டுகளில் நாம் கண்டோம். அதை இப்பொழுது நாம் மறந்து போயிருப்பது தான் மகா வேதனை.

இந்தியா நம் தாய் நிலத்தை மேலும் கபளீகரம் செய்வதற்கு பல திட்டங்களை தீட்டி வருகின்றது. பல இந்திய முதலீட்டாளர்களை தமிழ்த் தேசம் நோக்கி அனுப்புகிறது. தமிழ்த் தேசம் எங்களும் குட்டி இந்தியாக்கள் உருவாகப் போகின்றனர். அதிக காலம் தேவையில்லை. இன்னும் பத்து வருடங்களில் எமது பாரம்பரிய, பண்பாடு நிறைந்த ஈழதேசத்தை நாம் தொலைத்து விடப் போறோம். சில வேளை புலம்பெயர் தேசங்களில் தான் நமது ஈழத்தை நாம் காணமுடியுமே என்னவோ?

இவை யாவும் வேதனை மீதூரப்பெற்ற வாக்கியங்கள். உண்மையில் ஈழத்தை நாம் இழந்து விட்டோம். நமது மக்கள் வல்லவர், வாழ்க்கையை எதிர்கொள்வர், வெல்வர். என்பது எனது நம்பிக்கை. யார், என்ன சொன்னாலும், தமிழ்த் தேசியம் மீது உறுதியும் ஆழ்ந்த பற்றும் கொண்டவர்கள். தமிழ்த் தேசியம் என்ற உணர்விலிருந்து அவர்களை அசைத்து விடமுடியாது. தமிழ்த் தேசியம் என்ற பெயரில் ஏமாற்றுவோர் பின்னால், சில காலம் அலைய நேரிடலாம். ஆனால், அவர்கள் வெகு சீக்கிரம் ஏமாற்றுகளிலிருந்தும், போலிகளிலிருந்தும் மீண்டுவிடுவார். *"பாலை பிளந்து பயன் விளைவிப்பான் என் ஊரான்"* என்ற மகாகவியின் பாடலுக்கிணங்க வாழ்பவர் எம் மக்கள்.

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

சிறு உதாரணம், 1977 தேர்தலில் இலங்கையிலே ஆகக் கூடிய பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர் அமிர்தலிங்கம். ஆனால், பத்து வருடங்கள் கழித்து வந்த 1988 தேர்தலில் அமுதலிங்கம் கட்டுக்காசும் இழந்தார். தெளிய சில காலம் எடுத்தாலும், தெளிவில் உறுதி மிக்கவர் எம் மக்கள்.

ஆனால், இக்காலம் எவரையும் குழப்பிவிடும் காலம். சுருங்கிய உலகின் கூறுகள் அவர்கள் மீது கலாசார போர்வையை போர்த்தி விடுகிறது. 'சிங்களம்' என்றால், சீறி எழக்கூடிய தமிழினம் இந்தியா என்று வருகின்றபோது மென்மைப்போக்கைக் கடைப்பிடிக்கிறது. போததற்கு, ஈழ தேசம் எங்கெங்கு காணிலும், அவர்கள் 'அவர்கள்'. எந்த ஊடகத்தைத் திறந்தாலும் 'அவர்கள்'. வீட்டைத் திறந்து தெருவில் காலடி வைத்தால் 'அவர்கள்'. எது செய்தாலும் எதிரே பிண்டப் பிரமாண்டமாய் நிற்பது 'அவர்கள்'.

இது மெல்ல மெல்ல எமக்கே தெரியாமல் எமக்குள் நஞ்சு பாய்ச்சுகின்ற வேலை. அந்த இந்திய நஞ்சில் நாம் இரண்டறக் கலந்து விடுவோம். எமக்கே தெரியாமல் நாம் ஈழ அடையாளத்தைத் துறந்து இந்திய அடையாளத்தை பொருத்திக் கொள்வோம்.

மேலும் சொல்வதானால், விடுதலைப்புலிகளை அண்டிப் பிழைத்த சில கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் பல்லாயிரக்கணக்கில் ஊதியம் வாங்கி அதிகார மையத்திடம் தஞ்சமடைந்து விட்டனர். அவர்கள் தமது சுகபோக வாழ்க்கைக்காக தமது இனத்தை விற்றுபிழைக்கிறார்கள். காலம் இவர்களை கவனிக்கும் தான். ஆயினும், அதற்கிடையில் நாம் இழக்கப் போவது ஓர் இனத்தின் வாழ்வை, வரலாற்றை. எவற்றைக் கொண்டும் இவற்றை மீட்டிட முடியாது.

இந்நேரத்தில் தான் தலைவரையும், தாயகத்தை நேசித்தோரையும் எண்ணி கண்ணீர் உகுக்கின்றேன். எமது தேசத்தை விக்கிறான்கள் பாவிகள். இதற்காகவாவது இருந்திருக்க வேண்டும் எமது இயக்கம்

# அபலைப் பெண்....

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*

அந்தப் பாலிய வயதில் அந்த உருவின்மீது அப்படியொரு கவர்ச்சி அந்தக் குழந்தைக்கு ஏன் ஏற்பட்டதோ தெரியவில்லை. அந்தக் குழந்தை பின் பெரியவனாகி கிட்டத்தட்டப் பத்தாயிரம் சமணத் துறவிகளைக் ஒரே இரவில் கழுவிலேற்றி மகிழ்ந்தது. அந்தக் குரூரம் இன்றும் எமது சமய சரித்திரங்களிற் பேசப்படுகின்றது, போற்றப்படுகின்றது, இளஞ்சிறார்களின் மனதில் பதிக்கப்படுகின்றது. கதை உண்மையோ பொய்யோ அது வேறுவிடயம். அதை வைத்துத் தானே சமய வியாபாரம் நடக்கிறது. நாம் யாரிடம் இதை முறையிடக் கூடும். இத்தகைய விமர்சனங்களை முன்வைப்பதே சமூகவிரோதமாகி விடும். நம்மை ஒதுக்கி வைத்துவிடுவார்கள். பெரியார் ஈவேரா போன்ற பகுத்தறிவாளர்கள் எவ்வளவு முயன்றார்கள்? தேவையற்றவற்றை, அநாகரிகமானவற்றை அகற்றி நல் நெறிகளைப் புகுத்தி சமூக சமய மறுமலர்ச்சியைக் கொண்டுவர எப்படியெல்லாம் முயன்றார்கள். முடிந்ததா?

இன்றுவரை சமயம் மனிதனுக்குச் செய்துள்ள நன்மைகளையும், தீமைகளையும் கணக்கிலெடுத்தால் தீமைகளே அதிகமாயுள்ளன. அந்த வரிசையில் நமது சகோதரியான றிசானா நபீக் தற்போது சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறாள். சமயம் போட்ட சட்டம் அவளது உயிரைப் பறித்தெடுத்து விட்டது. இதைப்பற்றி எழுதும்போது சில நண்பர்கள் இவர்களுக்கேன் தேவையற்ற வேலை? எங்கள் இனப் பெண்ணுக்கு நேர்ந்த முடிவையிட்டு நாங்கள் பார்த்துக் கொள்ளுவோம்தானே என்றுகூட நினைக்க இடமுண்டு. ஆனாலும் கண்ணுக்கு முன்னே காட்டப்பட்ட அவலக்காட்சியைப் பார்த்துவிட்ட பிறகு, நடந்துள்ள அநீதியை அவதானிக்கும்போது மனத்தாங்கலோடு இந்த அலசலை எழுதாமலிருக்க முடியவில்லை. அது மனிதத்தின் கடமையல்லவா?

*தொடருவம்*

# மாலியும்....

*(12ம் பக்கத் தொடர்ச்சி)*

மேலும் அமெரிக்கா தற்போது அல் கெய்தாவிற்கு எதிராக தான் தேர்ந்தெடுத்த சில தலைவர்களைக் கொல்லும் உபாயத்தைக் கொண்டுள்ளது. மாலியில் அப்படி சில தீவிர வாதத் தலைவர்களைக் கொன்று நிலைமையை தனக்கு சாதகமாக்க அமெரிக்கா திட்டமிட்டிருந்தது.

### ◆ பாவம் துவாரெக் இனத்தவர்கள்

